(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

# இல. 1(4).] பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2015 நவெம்பர் 06 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2015 நவெம்பர் 20, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 26 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 மே மாதம் 18 ஆம் திகதிய 1915/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.11.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## 2015 நவெம்பர் 21, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

12/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் விளையாட்டுத்துறை அமைச்சினால் ரூ. 39,061,290.12 பெறுமதியான 14,000 கரம் பலகைகளையும் 14,000 சதுரங்க பலகைகளையும் பகிர்ந்தளித்தல் விளையாட்டுத்துறை அமைச்சின் 2014 ஆம் ஆண்டுக்குரிய செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) பாராளுமன்றத்தினால் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் கீழ் மேற்படி கரம் பலகைகளையும் சதுரங்க பலகைகளையும் கொள்வனவு செய்வதற்காக விளையாட்டுத்துறை அமைச்சிற்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iii) ஆமெனின், அத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) சதொசவினால் கொள்வனவு செய்யப்பட்ட இப்பொருட்கள் அமைச்சின் களஞ்சியங்களில் முறையாக கையேற்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அமைச்சின் களஞ்சியங்களில் கையேற்கப்படவில்லையெனில், மேற்படி பொருட்களை கையேற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் எஞ்சிய பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கொள்வனவு நடைமுறைகளின்றி முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரின் ஆலோசனைக்கு ஏற்ப கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அமைச்சுக்கு கிடைக்கப்பெறாத விளையாட்டுப் பொருட்கள் பற்றி நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினால் நடத்தப்படுகின்ற புலனாய்வுகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) இது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

(iii) இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நீதிமன்ற நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

19/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) 2011 – 2014 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தினுள் கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் மற்றும் கூட்டுறவு மிகை நிதியத்தின் ரூபா 897.06 மில்லியன் தொகையை, 1972 ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சங்க சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக துஷ்பிரயோகம் செய்தல் மற்றும் தவறான முறையில் கையாள்வதற்கு இடமளித்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் முன்னாள் அமைச்சருக்கும் மற்றும் முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் எதிராக பொலிஸ் நிதிசார் குற்றப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்பாடு மீதான புலனாய்வுகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிதி துஷ்பிரயோகம் மற்றும் தவறான கையாளுகை தொடர்பாக பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் புலனாய்வொன்று மேற்கொள்ளப் படுகின்றதா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி நிதி துஷ்பிரயோகம் மற்றும் தவறான கையாளுகை தொடர்பாக நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இழக்கப்பட்டுள்ள பணத் தொகையை மீள அறவிடுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் தற்றுணிபின் பிரகாரம் பொதுவாக அரச நிதியங்களின் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

22/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கௌரவ நிதி அமைச்சர் 2015 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்டவாறான வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து ஆற்றிய உரையின் போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த ரூபா 50 இலட்சம் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாட்டுக்கு பதிலாக ரூபா 100 இலட்சம் பெற்றுக்கொடுக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டதோடு, கௌரவ பிரதம அமைச்சரும் அதனை உறுதிப்படுத்திய போதிலும், 2015 ஆம் ஆண்டுக்கென 2015 செத்தெம்பர் 10 ஆம் திகதி வரை எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடுகள் வழங்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதுவரை வரலாறு பூராவும் பாராளுமன்ற உறுப்பினருக்குக் கிடைத்த ரூபா 50 இலட்சம் தொகையையேனும் இந்த ஆண்டின் எஞ்சியுள்ள சில மாத காலத்தினுள் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், தொடர்ச்சியாக நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக மக்கள் பிரதிநிதி ஒருவர் அனுபவித்து வந்த சிறப்புரிமையை தற்போதைய அரசாங்கம் பறித்துக் கொண்டுள்ளதாக ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

29/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) சப்பிரகமுவ மாகாணத்தில், மிகவும் முக்கியமான பௌத்த வழிபாட்டுத் தலமாகிய கூரகல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனிதத் தலத்தில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளல் நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கூரகல புனிதத் தலத்திற்கு சொந்தமான காணியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிலப்பரப்பின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அகழ்வுகளின் மூலம் கிடைத்த தொல்பொருட்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கூரகல புனிதத் தலத்தின் பௌத்த உரிமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி அகழ்வுகளை இடையறாமல் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி எப்போதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

79/ '15

கௌரவ சந்திம கமகே,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) கடந்த ஐந்து ஆண்டுகள் தொடக்கம் யானை-மனித மோதல் தீவரமடைந்துள்ளதுடன் இதனால் மனித உயிர்களும் யானை வளமும் அழிவடைந்து வருகின்றதென்பதையும்;

(ii) முறைசாரா விதத்திலும் திட்டமிடப்படாத வகையிலும் மின்சார வேலிகள் நிர்மாணிக்கப்படுவதன் ஊடாக காட்டு யானைகளிடமிருந்து கிராமங்களை பாதுகாப்பதற்கு பதிலாக அநீதியான முறையில் தமது காணிகள் மற்றும் வீடுகளை இழப்பதன் மூலம் கிராமங்களில் வாழும் மக்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கடந்த காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட மற்றும் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள மின்சார வேலி கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மின்சார வேலிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) இன்றளவில் செயலிழந்துள்ள மின்சார வேலிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி (அ)(ii) இல் குறிப்பிடப்பட்ட சம்பவங்களை எதிர்நோக்கிய மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கும் இவ்வாறான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கும் உரிய முறையியலொன்று அமைச்சில் நிறுவப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

93/ '15

கௌரவ வாசுதேவ நாணயக்கார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாடசாலைகளுக்கு முதலாம் ஆண்டுக்கு பிள்ளைகளை சேர்க்கும் போது தமது வசிப்பிடத்திற்கான உரிமையை நிரூபிக்கின்ற உறுதி இன்மையின் காரணமாக மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்குக்கூட அழைக்கப்படாத சந்தர்ப்பங்கள் உள்ளதென்பதையும்;

(ii) கடந்த அரசாங்க காலத்தில் உறுதிகள் இன்மையின் காரணத்தினால் மாத்திரம் பாடசாலைகளுக்கு சேர்த்துக்கொள்ளப்படாத பிள்ளைகள் சம்பந்தமாக தனியானதொரு மேன்முறையீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாடசாலைகளுக்கு முதலாம் ஆண்டுக்கு பிள்ளைகளை சேர்க்கும் போது வசிப்பிடத்தை நிரூபிப்பதற்காக குடியிருப்பாளர்கள் குறிப்பிட்ட காணியின் உறுதியை சமர்ப்பிக்க வேண்டுமெனும் சட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) உறுதி இன்மையின் காரணத்தினால் மாத்திரம் இற்றை வரை பாடசாலைகளுக்கு சேர்த்துக்கொள்ளப்படாத பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) உரிமை உள்ளதா இல்லையா என்பதை கவனத்திற்கொள்ளாது குடியிருப்பது நிரூபிக்கப்படும் பட்சத்தில் அதனை தகைமையாகக் கருதி நியாயமான தீர்வொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

165/ '15

கௌரவ லக்கி ஜயவர்தன,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) 1977 முதல் நீண்ட காலமாக உடுநுவர தேர்தல் தொகுதி முழுவதுமாக யட்டிநுவர டிப்போவினால் முறைசார்ந்ததொரு பேரூந்து சேவை உடுநுவர பயணிகளின் வசதி கருதி ஈடுபடுத்தப்பட்டிருந்தது என்பதையும்;

(ii) பிரதேச மட்டத்தில் டிப்போக்களை பேணிவந்து பிரதேசத்திலுள்ள பயணிகளுக்கு வசதி செய்து கொடுத்தல் இலங்கை போக்குவரத்துச் சபையின் நோக்கமாக இருந்ததென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் பேரூந்துகள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட வீதிகள் மற்றும் வீதி இலக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வீதிகளில் யட்டிநுவர டிப்போவினால் தற்போது பேரூந்துகள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாத வீதிகள் யாவை என்பதையும்;

(iii) தற்போது பேரூந்துகள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற வீதிகள், வீதி இலக்கங்கள் மற்றும் நேரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது யட்டிநுவர டிப்போவினால் ஓட்டத்தில் ஈடுபடுத்துதல் நிறுத்தப் பட்டுள்ளதும், முன்னர் பேரூந்துகள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டதுமான வீதிகளில் மீண்டும் பேரூந்துகளை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

178/ '15

கௌரவ (டாக்டர்) ஏ.ஆர்.ஏ. ஹபீஸ்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) திரு. எம்.எம்.ஏ. நிப்ரான் மற்றும் அவரது குடும்ப அங்கத்தவர்கள் வசித்த திக்வெல்ல, யோனகபுர, வெதகெதர, 264/1ஆம் இலக்க வீடு மலைசார்ந்த பிரதேசத்தில் அமைந்திருந்தது என்பதையும்;

(ii) 2012.09.22ஆம் திகதி பெய்த மழையின் காரணமாக உடைந்து சேதமான இந்த வீட்டில் எஞ்சியிருந்த சமையலறையும் 2015.09.02ஆம் திகதி அதிகாலை 1.45 மணியளவில் அருகாமையில் இருந்த மண்மேடு சரிவுக்குள்ளானமையால் முழுமையாக அழிவடைந்துள்ளது என்பதையும்;

(iii) இது தொடர்பில் பிரதேசத்தின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ள போதிலும் இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) சிறு பிள்ளைகள் மற்றும் மனைவியுடன் ஒரு குடும்பமாக வாழ்வதற்கு இருந்த மேற்படி வீடு முழுமையாக உடைந்து சேதமடைந்ததன் மூலமும் நிரந்தர வாழ்வாதாரம் இன்மையாலும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ள திரு. நிப்ரானுக்கு மேற்படி வீட்டை கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

30/ '15

கௌரவ புத்திக பத்திறண,— விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பணத்தொகையின் பெறுமதி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணத்தொகை செலவிடப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நாட்டிற்கு கிடைத்த நன்மைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) புத்தாக்குநர்களை ஊக்குவிப்பதற்காக அப்போதிருந்த தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு மேற்கொண்ட பணிகள் யாவையென்பதையும்;

(ii) 2014 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட புத்தாக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி புத்தாக்கங்களை சமர்ப்பித்தவர்கள் யாவரென்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்கப்பட்ட அனுசரணைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் பணத்தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதிகரிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் பணத்தொகை யாதென்பதையும்;

(iii) அப்பணத்தொகையை செலவிடுவதற்காகவுள்ள திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

13/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) 2015 சனாதிபதி தேர்தலை மையமாகக் கொண்டு சீல அனுஷ்டானத்துக்கான புடவைகள் உட்பட பல்வேறு பொருட்களை வாக்காளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 600 மில்லியன் அரச நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக அப்போதைய தொலைத்தொடர்புகள் ஒழுங்குமுறையாக்கல் ஆணைக்குழுவின் தவிசாளரும், முன்னாள் சனாதிபதியின் செயலாளருமான திரு. லலித் வீரதுங்க மற்றும் பணிப்பாளர் நாயகம் திரு. அனுச பெல்பிட்ட ஆகியோருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நிறுவன ரீதியான நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இது தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற நிதிசார் குற்றப் புலனாய்வுகளின் தற்போதைய நிலைமை யாது என்பதையும்;

(iii) பாரியளவிலான நிதிக் குற்றச் செயல்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் தயக்கம் காட்டுவதெனில், இவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசு இழந்துள்ள ரூபா 600 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) தொலைத்தொடர்புகள் ஒழுங்குமுறையாக்கல் ஆணைக்குழுவின் நிதியைப் பயன்படுத்தி சீல அனுஷ்டானத்துக்கான புடவைகள் பகிர்ந்தளிக்கப்பட்டமை தவிர, 2015 சனாதிபதி தேர்தலுடன் தொடர்புடையதாக, அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஏனைய சம்பவங்கள் யாவை என்பதையும்;

(iii) அதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

31/ '15

கௌரவ புத்திக பத்திரண,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) இன்றளவில் வெளிநாடுகளில் சிறைபிடிக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ள நாடுகள் மற்றும் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள மீனவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சிறைபிடிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மீனவரினதும் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் சிறையிலுள்ள காலப்பகுதி யாதென்பதை வெவ்வேறாக அவர் சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) (i) சிறைபிடிக்கப்படுகின்ற மீனவர்களை துரிதமாக மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதது ஏனென்பதையும்;

(ii) மீனவர்கள் கடல் எல்லைகளை மீறுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்கள் விடுதலை பெற்ற பின்னர் அவர்களது தொழிலை மீள ஆரம்பிப்பதற்கு உதவி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2015 நவெம்பர் 23, திங்கட்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

14/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) 2015 சனாதிபதித் தேர்தலை மையமாகக் கொண்டு முன்னாள் விடயப்பொறுப்பு அமைச்சரின் ஆலோசனையின் பேரில் வாழ்வின் எழுச்சி நிதியத்தைப் பயன்படுத்தி ரூபா 20,132,277/- இற்கு (20.1 மில்லியன்) GI குழாய்கள் (கொடிக் கம்பங்கள்) கொள்வனவு செய்யப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வாழ்வின் எழுச்சி நிதியத்தின் நோக்கங்களுக்கு அமைய பிரதேச சபைகளால் GI குழாய்களைக் கொள்வனவு செய்து விநியோகிப்பதற்கான இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது வாழ்வின் எழுச்சி சட்டத்தின் எப்பிரிவின் கீழ் என்பதையும்;

(iii) அதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ள அதிகாரி யார் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வாறு நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமை காரணமாக இழக்கப்பட்டுள்ள ரூபா 20 மில்லியன் தொகையை அறவிடுவதற்காக தற்போதைய அமைச்சர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இது தொடர்பாக நிதிசார் குற்றப் புலனாய்வொன்று மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி புலனாய்வின் முன்னேற்றம் யாது என்பதையும்;

(iv) இது தொடர்பில் நிருவாக ரீதியாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

20/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் காணப்பட்ட இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் இடம்பெற்றுள்ள நிதி வளங்களின் துஷ்பிரயோகம் பற்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதி 2015 ஜூன் மாதம் 10 ஆம் திகதி, IS/INV/PC/GDE/2015/04 ஆம் இலக்க கணக்காய்வு மீள்நோக்கின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிசார் துஷ்பிரயோகங்கள் யாவை;

(ii) மேற்படி துஷ்பிரயோகங்களின் பெறுமதி வெவ்வேறாக யாது;

(iii) கணக்காய்வு மீள்நோக்கில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிதிசார் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் அமைச்சு புலனாய்வொன்றை ஆரம்பித்துள்ளதா;

(iv) ஆமெனில், அதன் தற்போதைய முன்னேற்றம் யாது;

(v) வெளிப்படுத்தப்பட்டுள்ள நிதிசார் குற்றங்கள் தொடர்பில் பொலிஸ் நிதிசார் குற்றப் புலனாய்வுப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புலனாய்வுகளின் தற்போதைய நிலைமை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

24/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) தென் மாகாணத்துக்குரிய, காபட் இட்டு செப்பனிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட 18 நெடுஞ்சாலைகளின் பணிகள் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) கெக்கணதுரவிலிருந்து வேஹல்ல ஊடாக திக்வல்ல வரையான வீதி வாகனப் போக்குவரத்துக்கு அன்றி நடந்து செல்வதற்குக்கூட முடியாதவாறு சேதமடைந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்ட 18 வீதிகளும் யாவை என்பதையும்;

(ii) மேற்படி (அ)(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வீதியில் காபட் இடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) பொதுத் திறைசேரியினால் மேற்படி வீதிகளுக்கு ஒதுக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) அதன் பிரகாரம், மேற்படி நெடுஞ்சாலைகளின் காபட் இட்டு செப்பனிடும் பணிகளுக்கு ஏற்புடையதான எதிர்கால வேலைத்திட்டம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

33/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சிங்கள மக்கள் சனத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி மக்கள் வசித்துவருகின்ற கிராமங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில், சிங்களக் கிராமங்களில் வசிக்கின்ற மக்களுக்கு வீடு, நீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் போதியளவில் கிடைப்பதில்லை என்பதையும்;

(ii) மேற்படி மக்களில் பெரும்பாலானோருக்கு அரசாங்க சேவைகள் முறையாக கிடைப்பதில்லை என்பதையும்;

(iii) மேற்படி மக்களை தமது கிராமங்களிலிருந்து வெளியேற்ற ஒருசிலர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் வசிக்கின்ற சிங்கள மக்களுக்குத் தேவையான வீடு, நீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி மக்களுக்கு தமது கிராமங்களின் உரிமையை உறுதிசெய்துகொடுக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) யுத்தத்தின் காரணமாக மட்டக்களப்பிலிருந்து கிராமங்களை விட்டு வேறு பிரதேசங்களுக்கு புலம்பெயர்ந்துள்ள சிங்கள மக்களை மீண்டும் அவர்களின் பழைய கிராமங்களுக்கு அழைத்துவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

80/ ’15

கௌரவ சந்திம கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) சுமார் கடந்த ஒரு தசாப்த காலமாக தொல்பொருட்கள் மற்றும் புதைபொருட்கள் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளமை மற்றும் திருடர்கள் கைப்பற்றியுள்ளமை பற்றி பல்வேறு ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இது தொடர்பாக தொல்பொருளியல் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ள சம்பவங்கள் மற்றும் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக தொல்பொருளியல் திணைக்களம் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பவங்கள் மற்றும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iv) மேற்படி சட்ட நடவடிக்கைகள் மூலம் தவறாளிகளாக்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் ஏற்படாதிருக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

160/ '15

கௌரவ தாரக பாலசூரிய,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) அரசாங்க உத்தரவாத விலைக்கு நெல் கொள்வனவு செய்யப்படுகின்ற மாவட்டங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) ஏனைய மாவட்டங்களில் விவசாயிகள் தமது உற்பத்திகளை அரசாங்கத்தின் உத்தரவாத விலையில் விற்பனை செய்துகொள்வதற்கான முறையியலொன்று உருவாக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி முறையியல் யாது என்பதையும்;

(v) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அரசாங்க உத்தரவாத விலைக்கு நெல் கொள்வனவு செய்யப்படுகின்ற மாவட்டமாக அங்கீகரிக்கப்படாதுள்ள மாவட்டங்களில் ஆகக் குறைந்தது கமநல சேவை நிலையங்களுக்கு நெல் கொள்வனவு செய்யும் முகவர் பதவியொன்றைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள முடியுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

164/ '15

கௌரவ லக்கி ஜயவர்தன,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கை கடமையில் ஈடுபட்டிருந்த பெருந்தொகையான இலங்கை இராணுவ வீரர்கள் 12 வருடங்கள் இராணுவத்தில் கடமையாற்றிவிட்டு இராணுவ சேவையிலிருந்து நீங்கியுள்ளனார் என்பதையும்;

(ii) இவர்கள் இன்றளவில் நிர்க்கதி நிலையில் உள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இராணுவத்தில் 12 வருடங்கள் கடமையாற்றிவிட்டு இராணுவ சேவையிலிருந்து நீங்கியுள்ள வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) நாட்டுக்காக உயிர் தியாகத்துடன் செயலாற்றிய இவர்களுக்கு பாதியளவு ஓய்வூதியம் வழங்கப்படுதல் பொருத்தமானதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனின், மேற்படி பாதியளவு ஓய்வூதியத்தை வழங்க நடவடிக்கை எடுக்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

176/ '15

கௌரவ எம். எச். எம். சல்மான்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) 1986 ஆம் ஆண்டில் அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவின் குடியிருப்பாளர்களில் மகாவலி "பீ" வலயத்தின் சேனபுர கிராமத்தில் குடயமர்த்தப்பட்ட சுமார் 38 குடும்பங்கள், 1992.04.14 ஆம் திகதியன்று அலிஞ்சிபொத்தான பிதேசத்துக்கு எல். ரீ. ரீ. ஈ. பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக உயிர் பாதுகாப்பு கருதி பிரதேசத்தை விட்டு வெளியேறினர் என்பதையும்;

(ii) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை இரத்துச் செய்கின்றபோது மேற்படி காணிகளை இவர்கள் இழந்த அதேவேளை குடியிருப்புக்கு மாத்திரம் மேட்டுநில காணிகளை வழங்கும் பொருட்டு 2013.08.02 ஆம் திகதியன்று விசாரணை நடத்தப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விசாரணை நடவடிக்கைகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) இன்றளவில் குடியிருப்புக்காக காணித் துண்டுகளை வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

179/ '15

கௌரவ (டாக்டர்) ஏ. ஆர். ஏ. ஹபீஸ்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) அண்ணளவாக 600 மாணவர்கள் கல்வி கற்கும் புத்தளம் மாவட்டத்தின் பு/கல்/ புலஞ்சிசேனை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடவசதி போதாமை மற்றும் கட்டிட வசதி பற்றாக்குறை கல்வி நடவடிக்கைகளை பேணிவருவதற்கு தடையாக அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் வசதி கருதி 60'x25' அளவிலான இரண்டு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணித்துக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

34/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(ii) மேற்படி புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட கம்பனி யாதென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்துக்கு ஏற்புடைய புனரமைப்பு நடவடிக்கைகளை வழங்கும் போது கேள்விப்பத்திரம் கோரல் நடைபெற்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நிறுவனம் சமர்ப்பித்திருந்த கேள்விப்பத்திரத்தின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(v) கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்திருந்த ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி, இலக்கங்கள் உரித்தான நாடுகள் மற்றும் கேள்விப் பத்திரங்களின் பெறுமதி வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்திற்கு கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்துடன் சேர்ந்து செயலாற்றியதன் மூலம் அரசாங்கத்துக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

87/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) ரக்னா ஆரக்ஷன லங்கா கம்பனி பாதுகாப்பு அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனமாகுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தாபிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும், அவ்வாண்டு முதல் 2015 வரை கம்பனியின் கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை தனித்தனியாக சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கம்பனி மூலம் பாதுகாப்புச் சேவை வழங்கப்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) பாதுகாப்பு வழங்குவதற்காக மேற்படி நிறுவனங்களுடன் உடன்படிக்கை செய்துகொண்ட ஆண்டு, திகதி மற்றும் நிறுவனங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2015 சனவரி முதல் இற்றை வரையிலான காலகட்டத்தில் மேற்படி கம்பனியை சேவை வழங்குவதிலிருந்து அகற்றியுள்ள அரச நிறுவனங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்;

(iii) அவ்வாறு அகற்றுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அதற்கு பதிலாக உபயோகப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கம்பனிகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பதிலீட்டுக் கம்பனிகளின் பணிப்பாளர்களது பெயர்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி கம்பனி ஆரம்பிக்கப்பட்டது முதல் வருடாந்தம் ஈட்டியுள்ள வருமானம் மற்றும் இலாபம் எவ்வளவென்பதையும்;

(ii) பொதுத் திறைசேரிக்கு வருடாந்தம் வழங்கியுள்ள பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

36/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2014ஆம் ஆண்டில் ஆசிரியர்களின் தாக்குதல்கள் உள்ளிட்ட இம்சைகள் மற்றும் துஷ்பிரயோகங்களால் துன்புறுத்தலுக்கு உள்ளாகிய பாடசாலை மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு மாணவனதும்/ மாணவியினதும் பெயர், முகவரி மற்றும் கல்வி கற்கும் பாடசாலை;

(ii) மேற்படி ஒவ்வொரு மாணவனுக்கும் அல்லது மாணவிக்கும் இழைக்கப்பட்டுள்ள துன்புறுத்தல்கள்;

(iii) துன்புறுத்தலுக்கு உள்ளாகிய ஒவ்வொரு மாணவன் அல்லது மாணவி தொடர்பிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்;

(iv) மேற்படி ஒவ்வொரு சம்பவத்துடனும் தொடர்புடைய ஆசிரியரது பெயர், முகவரி மற்றும் பாடசாலை;

(v) மேற்படி ஒவ்வொரு ஆசிரியருக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்;

வெவ்வேறாக யாதென்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) ஆசிரியர்களினால் மாணவ மாணவியர்களுக்கு நேரிடுகின்ற மனிதாபிமானமற்ற துன்புறுத்தல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2015 நவெம்பர் 24, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

53/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தின் உதவியுடன் பேணிவரப்படுகின்ற மத அமைப்புக்களின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவ்வெண்ணிக்கை ஒவ்வொரு மதத்தின்படி தனித்தனியாக எவ்வளவு;

(iii) மேற்படி கல்வி நிறுவனங்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே, (அ) (iii) இல் குறிப்பிடப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பயில்கின்ற மாணவ மாணவியரின் எண்ணிக்கை ஒவ்வொரு நிறுவனத்திற்கமைய தனித்தனியாக எவ்வளவு;

(ii) மேற்படி கல்வி நிறுவனங்களின் பதவியணியின் உள்ளடக்கம் யாது;

(iii) மேற்படி நிறுவனங்களுக்காக அரசாங்கம் ஆண்டொன்றுக்கு செலவிடுகின்ற பணத்தொகை ஒவ்வொரு நிறுவனத்திற்கமைய தனித்தனியாக எவ்வளவு;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

163/ ’15

கௌரவ சந்திம கமகே,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) தமது பயிர்ச்செய்கை நிலங்களை விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு விவசாயிகளுக்கு துப்பாக்கிகளை வழங்கும் முறையியல் யாது என்பதையும்;

(ii) அநுராதபுர மாவட்டத்தில் இவ்வாறு வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) இதன்படி துப்பாக்கி பெற்றுள்ள அனைவரும் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனரா என்பதையும்;

(iv) இன்றேல் இவர்களுக்கு எந்த அடிப்படையில் துப்பாக்கிகள் வழங்கப்பட்டன என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அனைவருக்கும் எவ்விதத் தடையுமின்றி அதிகாரிகளைச் சந்தித்து துப்பாக்கியொன்றை பெற்றுக்கொள்வதற்கான இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல் அதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

166/ '15

கௌரவ லக்கி ஜயவர்தன,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொல்கொல்லை தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் வளாகத்தில் மஹிந்த ராஜபக்ஷ நாடக அரங்கு எனும் பெயரில் கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கட்டடம் திறந்து வைக்கப்பட்டு நீண்ட காலம் கடந்துள்ள நிலையிலும், உரிய விதத்தில் பயன்படுத்தப்படுவதில்லை என்பதையும்;

(iii) பெருமளவிலான பணம் அறவிடப்படுவதன் காரணமாக இந்த நாடக அரங்கில் அரங்கக்கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அரங்காற்றுகையாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் வாய்ப்புக் கிட்டுவதில்லை என்பதையும்;

(iv) இதன் காரணமாக இவர்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்தின் மூலம் செலவிடப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இது திறந்து வைக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iii) இதுவரை மேற்படி நாடக அரங்கில் நடத்தப்பட்டுள்ள அரங்கக்கலை நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) குறித்த அரங்கக்கலை நிகழ்ச்சிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நாடக அரங்கில் அரங்கக்கலை நிகழ்ச்சியொன்றை நடத்துவதற்காக ஒரு நாளைக்கு அறவிடப்படும் பணத்தொகை யாது என்பதையும்;

(vi) இதற்காக வழங்கப்படும் நேரம் எவ்வளவு என்பதையும்;

(vii) இதுவரை இந்த நாடக அரங்கில் நடத்தப்பட்டுள்ள அரங்கக்கலை நிகழ்ச்சிகளிலிருந்து பெற்றுக் கொண்டுள்ள மொத்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

(viii) அரங்காற்றுகையாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் நியாயமான கட்டணத்தில் இந்த நாடக அரங்கில் அரங்கக்கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ix) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

171/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 'தயட்ட கிருள' அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்தறை மாவட்டத்தில் செயற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட பல அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 2015 சனவரி மாதம் தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ள தென்பதையும்;

(ii) இவ்வருடத்தில் நடைபெற்ற ஒரேயொரு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், அவை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என அரசாங்கத்தின் அரசியல்வாதிகளும் உத்தியோகத்தர்களும் வலியுறுத்தினர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) உத்தேசிக்கப்பட்ட இடத்தில், மாத்தறை புதிய நகரத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எத்திகதியில் என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் என்பதையும்;

(iv) மாத்தறை புதிய நகர மண்டபத் தொகுதியின் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், எத்திகதியில் என்பதையும்;

(vi) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

177/ '15

கௌரவ எம். எச். எம். சல்மான்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) சுனாமி பேரழிவின் காரணமாக வீடுகளை இழந்தவர்களது பிரச்சினை தொடர்பில், அம்பாறை அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர் விழிப்புணர்வூட்டப்பட்ட சனாதிபதி செயலகத்தின் SD/8/2 ஆம் இலக்க, 2010.09.30 ஆம் திகதிய கடிதம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் MNBD/06/AD/CO/16 ஆம் இலக்க, 2010.11.02 ஆம் திகதிய கடிதம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் MDM/AS/DM/46 ஆம் இலக்க, 2010.09.23 ஆம் திகதிய கடிதங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை;

(ii) இவற்றின் தற்போதைய முன்னேற்றம் யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுனாமி பேரழிவின் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவில் வீடுகளை இழந்த குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்களது பெயர் மற்றும் முகவரி யாது;

(iii) வீடுகளை இழந்தவர்களில் இதுவரை நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் பெயர் மற்றும் முகவரி யாது;

என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

54/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுக வளவினுள் சீனி சுத்திகரிப்புத் தொழிற்சலை ஒன்றை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதா;

(ii) அவ்வாறாயின் அந்நிறுவனத்தின் பெயர் மற்றும் வெளிநாட்டு நிறுவனமாயின் நாடு யாது;

(iii) அக்கம்பனியின் பணிப்பாளர் சபையின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கம்பனி முதலீடு செய்யும் பணத் தொகை யாது;

(ii) அரசாங்கத்தினால் இக்கம்பனிக்கு வழங்கப்படும் சலுகைகள் யாவை;

(iii) சீனி சுத்திகரிப்புத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதன் மூலம் இந்நாட்டுக்கு கிடைக்கும் நன்மைகள் யாவை;

(iv) மேற்படி தொழிற்சாலையின் மூலம் ஒரு வருடத்தில் சுத்திகரிக்க எதிர்பார்க்கப்படும் சீனியின் தொகை எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இத்தொழிற்சாலையின் காரணமாக இலங்கையின் சீனிக் கைத்தொழில் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2015 நவெம்பர் 26, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

55/ '15

கௌரவ புத்திக பத்திரண,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) நகர்ப்புற பாடசாலைப் பிள்ளைகள் போதைப்பொருட் கடத்தல்காரர்களின் இரையாக மாறியுள்ளனர் என்பதையும்;

(ii) இக்கடத்தல்கள் பாடசாலைப் பிள்ளைகள் மூலம் நடாத்தப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது போதைப்பொருட்கள் பாடசாலைகளுக்குள் கொண்டுவரப்படுவதை நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த ஐந்து வருடங்களில் போதைப்பொருட்கள் தொடர்பான தவறுகளுக்காக கைது செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்களை மீண்டும் சமூகமயப்படுத்த அரசாங்கம் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் யாவை;

(iii) இவ்வாறு சமூகமயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் தொடர்பாக பின்னாய்வு செய்யும் செயல்முறையொன்று செயற்படுத்தப்படுகின்றதா;

(iv) ஆமெனில், அச்செயல்முறையுடன் தொடர்புடைய கட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

167/ '15

கௌரவ லக்கி ஜயவர்தன,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 1977 இல் அப்போதைய வீடமைப்பு அமைச்சரான காலஞ்சென்ற ரணசிங்க பிரேமதாச அவர்களின் எண்ணக்கருவிற்கு அமைவாக நடுத்தர வகுப்பினருக்காக கண்டி ஹந்தான பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வீடமைப்பு அதிகாரசபைக்கு சொந்தமான மேற்படி திட்டத்தின் மொத்த நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்;

(ii) இங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது சகல வீடுகளும் குடியிருப்பாளர்களுக்கு பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனின், அது எவ்விதமாக என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது மேற்படி நிலப்பகுதியில் அதிகாரசபைக்கு சொந்தமான வெற்றுக் காணிகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனின், இக்காணிகளின் அளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) கடந்த அரசாங்கத்தின் வீடமைப்பு அமைச்சரினால் இந்நிலப்பகுதியில் சொகுசு வீடுகளை நிர்மாணிக்க காணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனின், அது யாருக்கு; மற்றும் அவ்வாறு விற்பனை செய்யப்பட்ட காணிகளின் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(v) இக்காணி விற்பனை செய்யப்பட்டதால் அதிகாரசபை பெற்ற வருமானம் எவ்வளவென்பதையும்;

(vi) தற்போது இக்காணிகளில் சொகுசு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனின், இவற்றின் விற்பனை விலை எவ்வளவென்பதையும்;

(viii) அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் யாவை என்பதையும்;

(ix) வீடுகள் நிர்மாணிக்கப்படவில்லையெனில், இக்காணிகள் மீண்டும் அதிகாரசபைக்கு சுவீகரிக்கப்படுமா என்பதையும்;

(x) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

172/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011.03.29 ஆம் திகதிய பொது மனுக் குழுவின் முடிவுக்கமைய, தொழில்வாய்ப்புகளற்ற பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அரச பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கு தென் மாகாண கல்வித் திணைக்களம் முறைசார்ந்த நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி, 06 பெயர் பட்டியல்களை 2011.05.03 ஆம் திகதியன்று மத்திய அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ளதென்பதையும்;

(ii) மேற்படி 06 பட்டியல்களில், 04 பட்டியல்களில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களுக்கு மாத்திரம் நியமனங்களை வழங்க நிரல் அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) எஞ்சியுள்ள 02 பெயர்ப் பட்டியல்களில் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்கள் அரச பாடசாலை ஆசிரியர்களாக ஆட்சேர்க்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

180/ '15

கௌரவ (டாக்டர்) ஏ. ஆர். ஏ. ஹபீஸ்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) சுனாமி பேரழிவின் காரணமாக நாட்டின் பல்வேறு மாகாணங்களிலும் வீடுகள் மற்றும் சொத்துக்களை இழந்துள்ள பல குடும்பங்கள் தற்போதுகூட அநாதரவான நிலையில் காணப்படுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வீடுகளை இழந்துள்ள ஆட்களை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தெரிவு செய்து அவர்களுக்கு நிரந்தர வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சும் இணைந்து மேற்படி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

58/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வட மத்திய மாகாண சபையின் உறுப்பினர்கள் அரசாங்க செலவில் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வெளிநாட்டு விஜயங்களில் கலந்துகொண்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையும், இவர்களது பெயர்களும் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உறுப்பினர்களின் வெளிநாட்டு விஜயங்களுக்காக மாகாண சபை செலவிட்டுள்ள பணத்தொகை ஒவ்வொரு உறுப்பினர் சார்பிலும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி உறுப்பினர்களின் வெளிநாட்டு விஜயங்களுக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி விஜயங்களின் மூலம் நாட்டுக்கு கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) உறுப்பினர்களுக்கு மேலதிகமாக மாகாணசபையின் செலவில் வேறு ஆட்கள் வெளிநாட்டு விஜயங்களில் கலந்துகொண்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்களது பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நபர்கள் வெளிநாடு செல்வதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அதன் மூலமாக நாட்டுக்கு கிடைத்துள்ள நன்மைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2015 நவெம்பர் 27, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

61/ '15

கௌரவ புத்திக பத்திரண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) தொழில்வாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்கின்ற இலங்கையர்களுக்கு பயிற்சியளிக்கின்ற நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பயிலுநர்களுக்கு அரசாங்கம் கொடுப்பனவொன்றை வழங்குவதாயின், அத்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி பயிலுநர்கள் அரசாங்கத்திற்கு ஏதேனும் பணத்தொகையை செலுத்த வேண்டியிருப்பின், அத்தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பயிற்சி நிலையங்களில் பயிலுநர்களுக்கு இலங்கையினதும் மற்றும் அவர்கள் சேவைக்காக செல்வதற்கு எதிர்பார்க்கின்ற நாட்டினதும் குடிவரவு, குடியகல்வு சட்டங்கள், சுங்கச் சட்டங்கள் மற்றும் செலாவணிச் சட்டங்கள் பற்றிய அறிவு வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

168/ '15

கௌரவ லக்கி ஜயவர்தன,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) கடந்த அரசாங்க காலத்தில் அரசியல் காரணங்களினால் உடுநுவர தேர்தல் தொகுதியில் வாழ்வின் எழுச்சி கொடுப்பனவுகள் கிடைக்காத குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்கள் உள்ளன என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்களுக்கு துரிதமாக மேற்படி கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உடுநுவர தேர்தல் தொகுதியில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் மூலம் மாதாந்தம் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவின் மொத்த மாதாந்தப் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கொடுப்பனவுத் தொகைகள் தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், தொகுதிகளுக்கு அமைய ஒவ்வொருவருக்கும் எவ்வாறு கொடுப்பனவு வழங்கப்படுகின்றதென்பதையும்;

(v) அவ்வாறு தொகுதிகளின் அடிப்படையில் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(vi) 2015 சனவரி 08 ஆம் திகதி உருவாக்கப்பட்ட நல்லாட்சியின் கீழ் வாழ்வின் எழுச்சி கொடுப்பனவை பெறுவோருக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், அத்தகைய ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ள விதம் யாது என்பதையும்;

அவர் சபையில் அறிவிப்பாரா?

(இ) உடுநுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வாழ்வின் எழுச்சி கொடுப்பனவுகளை பெறுகின்ற குடும்பங்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அவர்கள் பெறுகின்ற கொடுப்பனவுத் தொகைகள், கிராம அலுவலர் பிரிவு வாரியாக தனித்தனியாக யாது என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

62/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) வீட்டுப் பணியாளர்களாக வெளிநாடுகளுக்கு செல்பவர்கள் பாவனைக்குதவாததும் பாவனையிலிருந்த அகற்றப்பட்டதுமான பொருட்களை இந்நாட்டிற்கு கொண்டுவருகின்றார்கள் என்பதையும்;

(ii) இதற்கு இவர்கள் பெருமளவு பணத்தை செலவிட வேண்டியுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி சிதைவடைந்த பொருட்கள் எமது நாட்டின் சூழலுக்கும் பிரச்சினையை தோற்றுவிக்கக் கூடுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வெளிநாடுகளிலிருந்து பாவிக்கப்பட்ட பழைய வீட்டுத் தளபாடப்பொருட்கள் போன்றவற்றை இந்நாட்டிற்கு கொண்டுவருவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

173/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) உள்ளூராட்சி திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட “கமென் கமட – தொரென் தொரட்ட” (கிராமம் கிராமமாக – வீடு வீடாக) கருத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் மூலம் மாத்தறை மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில், பரமுல்ல, மருந்துக் களஞ்சிய வீதி, மதகினை அபிவிருத்தி செய்வதற்கு மாத்தறை மாநகர சபை மாத்தறை வல்கம, வடக்கு, கொட்டிககொட ரஜமகா விஹாரை வீதி, 112/3 இலக்கத்தில் அமைந்துள்ள எக்கமுத்து விவசாய அமைப்புடன் உடன்படிக்கை செய்துகொண்டுள்ளதென்பதையும்;

(ii) கோப்பு இலக்கம் ම.ම.න.ස/නා.ඉ.දෙ/WC-3/2014-දො.දො-04 உடன்படிக்கையின் பிரகாரம், 2014 நவெம்பர் 17 ஆம் திகதி இவ்விடயத்தின் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டு 2014 திசெம்பர் மாதம் இப்பணிகள் பூர்த்திசெய்யப் பட்டிருந்தும், இற்றைவரை சம்பந்தப்பட்ட ஒப்பந்தப் பணத்தொகை விவசாய அமைப்பிற்கு செலுத்தப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) சம்பந்தப்பட்ட நிர்மாணிப்புகள் பூர்த்தியாக்கப்பட்டு கொடுப்பனவுக்கான கட்டணப் பட்டியல்ககளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படி ஒப்பந்தத்துக்கு ஏற்புடையதான பணத்தொகை வல்கம வடக்கு எக்கமுத்து விவாசாய அமைப்பிற்கு விடுவிக்கப்படும் தேதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

63/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) தற்போது இலங்கையில் பெருமளவில் இலத்திரனியல் கழிவுப்பொருட்கள் வெளியேற்றப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி கழிவுப்பொருட்களில் ஒரு பகுதி பாதுகாப்பற்ற முறையில் சூழலுக்கு வெளியேற்றப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இலத்திரனியல் கழிவுப்பொருட்கள் பாதுகாப்பற்ற முறையில் சூழலுக்கு வெளியேற்றப்படுதல் சூழல் மாசடைதலுக்கு பிரதானமான காரணியாக மாறியுள்ளதென்பதையும்;

(iv) மக்களின் சுகதாரத்திற்கும் இலத்திரனியல் கழிவுப்பொருட்கள் அச்சுறுத்தலாக அமைகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் ஆண்டொன்றுக்கு அகற்றப்படும் இலத்திரனியல் கழிவுப்பொருட்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கழிவுப்பொருட்களை முகாமை செய்தல் சம்பந்தமாக வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iv) தற்போது அவ்வேலைத்திட்டம் நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலத்திரனியல் கழிவுப்பொருட்களின் மூலம் சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுகின்ற இராசயனப் பொருட்கள் பற்றி ஏதேனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆய்வை மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர் மற்றும் அவ்வாய்வு மேற்கொள்ளப்பட்ட தேதி யாதென்பதையும்;

(iii) இன்றேல், எதிர்காலத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2015 நவெம்பர் 28, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

69/ '15

கௌரவ புத்திக பத்திறன,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இந்து சமுத்திரத்தின் சர்வதேச கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு சீன படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த அனுமதி வழங்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி படகுகளுக்கும் இலங்கைக்கும் இடையிலான உடன்படிக்கை தொடர்பான நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(iv) இவ்வாறு அனுமதி வழங்கப்படுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) சர்வதேச கடலில் மீன் பிடிக்கும் இலங்கைப் படகுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) சீனப் படகுகளின் காரணமாக இலங்கை மீனவர்களுக்கு ஏற்படுகின்ற அநீதியை ஒழிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) சீனப் படகுகளுக்கு அனுமதி வழங்குவதற்குப் பதிலாக இலங்கையர்களுக்கு பாரிய மீன்பிடிப் படகுகளை பெற்றுக்கொள்வதற்கு உதவி வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இலங்கையர்களுக்கு சர்வதேச கடலில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான பாரிய மீன்பிடிப் படகுகளையும் நவீன தொழில்நுட்ப உபகரணங்களையும் தேவையான வசதிகளையும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்; எத்திகதியிலிருந்து என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

169/ '15

கௌரவ லக்கீ ஜயவர்த்தன,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) கடந்த அரசாங்க காலத்தில் அரசியல் காரணங்களினால் வாழ்வின் எழுச்சி கொடுப்பனவுகள் கிடைக்காத குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்கள் உள்ளன என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்களுக்கு துரிதமாக மேற்படி கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நாடு முழுவதிலும் உள்ள வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் மூலம் கொடுப்பனவு வழங்கப்படுகின்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவின் மொத்த மாதாந்தப் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கொடுப்பனவுத் தொகைகள் தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகுதிகளுக்கு அமைய ஒவ்வொருவருக்கும் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற கொடுப்பனவுத் தொகைகள் யாவை என்பதையும்;

(v) நாட்டில் தொகுதிகளின் அடிப்படையில் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(vi) 2015 சனவரி 08 ஆம் திகதி உருவாக்கப்பட்ட நல்லாட்சியின் கீழ் வாழ்வின் எழுச்சி கொடுப்பனவை பெறுவோருக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் ஒவ்வொரு தொகுதிக்கும் அமைய தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

70/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) மாடுகளுக்கு ஏற்படும் மாட்டுக்குரை மற்றும் கோமாரி நோய் மிகத் தீவிரமாக இலங்கை பூராவிலும் பரவிச் செல்கின்றதென்பதையும்;

(ii) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் மேற்படி நோயை தடுப்பதற்கு வழங்கப்படும் தடுப்பூசி போதியளவில் இல்லையென்பதையும்;

(iii) மேற்படி நோயை கட்டுப்படுத்துதல் தொடர்பாக குறிப்பிட்ட திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பல விடயங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) அவ்வாறு செய்ததன் காரணமாக மேற்படி நோயைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையிலிருந்து அகற்றப்பட்ட விடயங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி விடயங்கள் அகற்றப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மீண்டும் மேற்படி விடயங்களை உள்ளடக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) மாடுகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை கட்டுப்படுத்தத் தேவையான ஔடதங்களை பற்றாக்குறையின்றி பெற்றுக்கொடுக்க எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி நோயினால் அழிவடையும் கால்நடை வளத்தை பரவச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் துரித நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

174/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.06.15 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை கல்வி நிருவாக சேவையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவையில் அமர்த்துவதற்கான அங்கீகாரம் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி அங்கீகாரத்தின் பிரகாரம் கல்வி அமைச்சின் செயலாளரால் தமது ED/4/58/16/01/04 ஆம் இலக்க 2015.07.17 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஓய்வுபெற்ற கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களை மீளச் சேவையில் ஈடுபடுத்துமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015 செத்தெம்பர் 01 ஆம் திகதியளவில், தென் மாகாண கல்வித் திணைக்களத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக விண்ணப்பித்துள்ள ஓய்வுபெற்ற கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்கள் முறைசார்ந்த வகையில் மீளச் சேவையில் அமர்த்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

71/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) மாத்தளை மாநககர சபை பிரதான கட்டிடத் தொகுதியில் பொருத்தப்பட்டிருந்த பழைய மூன்று இடிதாங்கிகளின் நிலக்கீழ் கம்பிகள் மற்றும் மாத்தளை நகர மத்தியில் அமைந்துள்ள பழைய கடிகாரக் கோபுரத்திலுள்ள கடிகாரத்தின் சில பகுதிகள் காணாமற்போயுள்ளதென்பதையும்;

(ii) காணாமற்போயுள்ள அப்பகுதிகள் வரலாற்றுப் பெறுமதிவாய்ந்தவைகள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சம்பவங்களைப் பற்றி முறைப்பாடுகள் கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இந்த முறைப்பாடுகள் கிடைத்த தேதிகள் யாவையென்பதையும்;

(iii) முறைப்பாட்டை செய்தவர்கள் யாவரென்பதையும்;

(iv) மேற்படி முறைப்பாடுகள் விசாரணைக்குட்படுத்தப்பட்ட தேதிகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி விசாரணைகளை நடாத்திய உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்;

(vi) மேற்படி முறைப்பாடுகள் சம்பந்தமாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) ஆமெனில், இவ்வாறு குற்றஞ்சாட்டபட்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் இவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2015 நவெம்பர் 30, திங்கட்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

72/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) தெற்கு, கட்டுநாயக்க – கொழும்பு மற்றும் வெளிச் சுற்றுவட்ட அதிவேக நெடுஞ்சாலைகள் காரணமாக வயற் காணிகள், ஈர நிலங்கள் மற்றும் வெள்ளப் பெருக்குச் சமவெளிகள் ஆகியவற்றுக்கு சேதமேற்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதன் காரணமாக அதிவேக நெடுஞ்சாலைகளை சுற்றிலுமுள்ள மக்கள் வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

(iii) மேற்படி சுற்றாடல் சேதமானது முழு நாட்டினதும் சுற்றாடல் சமநிலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அதிவேக நெடுஞ்சாலைகள் காரணமாக வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள பிரதேசங்களை அத்தகைய அச்சுறுத்தலிலிருந்து மீட்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) சேதத்துக்குள்ளான சுற்றாடல் முறைமைகளை பேணுவதற்கு அவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகைய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே (அ)(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலுடன் தொடர்புடைய ஏனைய அமைச்சுக்களுடனான ஒருங்கிணைந்ததொரு நிகழ்ச்சித்திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய நிகழ்ச்சித்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

170/ '15

கௌரவ லக்கி ஜயவர்தன,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் 2015 வரையான காலப்பகுதிக்குள் கண்டி மாவட்ட பாடசாலைகள் மற்றும் கிராமிய விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துவதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மாவட்டம் முழுவதிலும் மேற்படி நிதியின் மூலம் நிர்மாணிக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி விளையாட்டு மைதானங்கள் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு அமைய தனித்தனியே யாது என்பதையும்;

(v) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதிகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விளையாட்டு மைதானங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை பிரிவு ரீதியாக யாவை என்பதையும்;

(iii) வேலைகள் பூர்த்தி செய்யப்படாதுள்ள விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவற்றின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக மேலும் தேவைப்படுகின்ற நிதி எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி நிதியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(vi) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

73/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.05.25 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்திற்கு சற்று தொலைவிலுள்ள கடலில் அமைந்துள்ள மசகு எண்ணெய் அனுப்பும் குழாய் பழுதடைந்ததனால் மசகு எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு தாமதக் கட்டணம் செலுத்த நேரிட்ட கப்பல்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு கப்பலுக்கும் செலுத்திய பணம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) குழாயை திருத்துவதற்கு எத்தனை நாட்கள் எடுத்தன என்பதையும்;

(iv) இக் காரணத்தினால் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை முழுமையாக மூடிவிடுவதற்கு நேரிட்ட நாட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) எரிபொருள் அனுப்பும் குழாய்க்கு ஏற்பட்ட இந்த சேதத்தினால் இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்ட மொத்த நட்டம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மிதவைக்குத் தேவையான குழாய்களை கொள்வனவு செய்வதற்காக இறுதியாக கேள்விப் பத்திரம் கோரப்பட்ட திகதி எது என்பதையும்;

(ii) அவ்வாறெனின், கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த கம்பனிகள் மற்றும் அந்த கம்பனிகள் உரித்தாகும் நாடுகள் யாவை என்பதையும்;

(iii) கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட கம்பனி யாதென்பதையும்;

(iv) அந்தக் கம்பனிக்கு கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

175/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தில் "தயட்ட கிருள" அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பல 2015 சனவரி தொடக்கம் நிறுத்தப்பட்டுள்தென்பதையும்;

(ii) இந்த ஆண்டில் நடத்தப்பட்ட ஒரேயொரு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அவை மீண்டும் ஆரம்பிக்கப்படுமென அரசாங்கத்தின் அரசியல்வாதிகளும் உத்தியோகத்தர்களும் வலியுறுத்தினர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வெஹெரஹேன ரஜமஹ விகாரையிலும் தெவிநுவர ரஜமகா விகாரையிலும் மற்றும் வெவுலுகன்னல புனித ஸ்தலத்திலும் இடை நடுவே கைவிடப்பட்டுள்ள நிர்மாணிப்புகளை மீண்டும் ஆரம்பிப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில் எத்திகதியில் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

74/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் உள்ள தேசிய அடையாள அட்டை இல்லாத ஆட்களின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்களுக்கு தேசிய அடையாள அட்டையொன்றை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது ஏன்;

(iii) இவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iv) ஆமெனில், அது எவ்வாறு;

(v) மேற்படி தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) புதிய இலத்திரனியல் அடையாள அட்டைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றதா;

(ii) ஆமெனில், 18 வயதைத் தாண்டிய இலங்கைப் பிரசைகள் அனைவருக்கும் அத்திட்டத்தின்கீழ் அடையாள அட்டைகளை வழங்க இயலுமா;

(iii) அதற்காக உள்ள திட்டங்கள் யாவை;

(iv) மேற்படி புதிய கருத்திட்டத்திற்காக செலவிட எதிர்பார்க்கின்ற பணத்தொகை எவ்வளவு;

(v) புதிய அடையாள அட்டைக்காக மக்களிடமிருந்து பணம் அறவிடப்படுமா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 01, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

75/' 15

கௌரவ புத்திக பத்திறண,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு உரித்தான பின்தங்கிய தொழில்நுட்ப உபகரணங்கள் மூலம் துல்லியமான வானிலை எதிர்வுகூறல்களை வழங்க முடியாதுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு மனித மற்றும் விருத்திசெய்யப்பட்ட பௌதீக வளங்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கின்ற நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நவீன உபகரணங்கள் எவ்வாறான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் என்பதையும்;

(iv) மேற்படி உபகரணங்களுக்குச் செலவாகும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(v) நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் பெற்றுக்கொடுக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

154/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையில் இலங்கை அரச சேவைக்கும் அரச இணை நிறுவனங்களுக்கும் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) வில் குறிப்பிடப்பட்ட காலத்தினுள் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை குறித்த நிறுவனத்திற்கு ஏற்ப தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்கள் நிறுவனங்களுக்கு உள்ளீர்க்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iii) நிரந்தர, தற்காலிக மற்றும் ஒப்பந்தம் ஆகிய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி (அ) வில் குறிப்பிடப்பட்ட ஊழியர்களில் 2015 யூன் மாதம் 28 ஆம் திகதிக்குப் பின்னர் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) இவர்கள் உரித்தாகின்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஊழியர்களின் எண்ணிக்கை நிறுவனத்தின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) மேற்படி (அ) வில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் சகல ஆட்சேர்ப்புகளும் மேற்கொள்ளப்பட்டது போட்டிப் பரீட்சையின் மூலமா அல்லது நேர்முகப் பரீட்சையின் மூலமா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

76/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் எப்பாவல பொஸ்பேட் நிறுவன வளாகத்தில் 850 மீற்றர் வீதிக்கு காபற் இடுவதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை வழங்குவதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iii) கேள்விப்பத்திரம் கையளிக்கப்பட்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்திற்கு கேள்விப்பத்திரம் கையளிக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டத்துக்காக கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்திருந்த நிறுவனங்களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், பணிப்பாளர் சபையின் பெயர்கள் மற்றும் கேள்விப்பத்திரத்தின் பெறுமதி ஒவ்வொரு நிறுவனத்துக்கும் அமைய வெவ்வேறாக யாவை என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) எப்பாவல பொஸ்பேட் நிறுவனத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி விசாரணையின் பெறுபேறுகள் யாவை என்பதையும்;

(iv) இன்றேல், விசாரணை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(vi) மேற்படி விசாரணையின் பெறுபேறுகளை இச் சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 02, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

77/ '15

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2014.07.01 ஆம் திகதி முதல் இறக்குமதிக்கு தடைவிதிக்கப்பட்டுள்ள உணவுச் சுவையூட்டிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு சுவையூட்டிக்கும் தடைவிதிக்கப்படுவதற்கான காரணம் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தடைசெய்யப்பட்ட சுவையூட்டிகள் போன்றே அஜினமொட்டோ அல்லது மொனோசோடியம் க்ளூடமேட் (MSG) சுவையூட்டியும் மனித உடலுக்கு பாதகமானதென்பதையும்;

(ii) இது புற்றுநோய் மற்றும் நரம்பு நோய்கள் உள்ளிட்ட பாரதூரமான நோய்களுக்கு காரணமாக அமைகின்றதென்பதையும்;

(iii) ஒரு வருடத்தில் 2200 மெட்ரிக் தொன்னை விட அதிகளவில் மேற்படி சுவையூட்டி இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) மொனோசோடியம் க்ளூடமேட் பாவனையை தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

81/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கும் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கும் சொந்தமான தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலை களின் பெயர்கள், அமைந்துள்ள பிரதேசங்கள் மற்றும் பயிரிடப்பட்டுள்ள பயிர் வகைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தோட்டம் மற்றும் தொழிற்சாலையைச் சார்ந்ததாக சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கடந்த 5ஆண்டுகளினுள் மேற்படி தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இலாபம் ஈட்டிய மற்றும் நட்டம் அடைந்த தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி காலகட்டத்தில் மேற்படி ஒவ்வொரு தோட்டமும் அல்லது தொழிற்சாலையும் பெற்றுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) நட்டமடைந்த அரச தோட்டங்களுக்கு திறைசேரியிலிருந்து பணம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், வழங்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணம் வழங்கப்பட்ட தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகள் யாவையென்பதையும்;

(iv) நட்டமடைகின்ற அரச தோட்டங்களை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 03, வியாழக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

94/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பிரகாரம் உண்ணாட்டு இறைவரித் திணைக்களத்தின் வினைத்திறனின்மை மற்றும் கவனயீனம் காரணமாக அரசாங்கம் ரூபா 388 பில்லியன் பணத்தொகையை இழந்துள்ளதென்பதையும்;

(ii) இத் தொகையில் சேர் பெறுமதி வரித் தொகை மோசடியின் ரூபா 3.9 பில்லியனும் உள்ளடங்குகின்றதென்பதையும்;

(iii) இதற்கமைய, சேர் பெறுமதி வரி மோசடியின் மூலம் அரசாங்கம் இழந்துள்ள பணத்தொகையானது, அரசாங்கம் இழந்துள்ள மொத்தப் பணத் தொகையில் அண்ணளவாக 0.5% மாத்திரமே என்பதையும்;

(iv) மிகுதி 99.5% பற்றி இற்றைவரை விசாரணை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சேர் பெறுமதி வரித் தொகை மோசடியைத் தவிர மிகுதி ரூபா 384.1 பில்லியனை அரசாங்கம் இழக்கச் செய்தமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பில் புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவர்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்கள் மற்றும் அந்தஸ்துகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஆட்கள் தொடர்பாக மேறகொள்ளப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

99/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) கடந்த இரண்டு வருட காலத்தினுள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பாரிய காடழிப்பு நடைபெற்று வருவதென்பதையும்;

(ii) மேற்படி காடழிப்பில் நேரடியாகவே அரசியல் தலையீடு காணப்படுகின்றது என்பதையும்;

(iii) ஆதலால் வன பாதுகாப்புத் திணைக்களம் மௌனமாயுள்ளதென்பதையும்;

(iv) மேற்படி காடழிப்பு இலங்கையின் சுற்றாடல் முறைமையிலும் அதேபோன்று கால நிலை மாற்றங்களிலும் நேரடியாகவே தாக்கத்தை எற்படுத்துகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரு மாகாணங்களுக்கும் உரித்தான வன ஒதுக்கங்கள் யாவை;

(ii) மேற்படி வனங்களின் பரப்பளவு ஒவ்வொரு வனத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) குறிப்பிட்ட வனங்கள் வன ஒதுக்கங்களாக மாற்றப்பட்ட ஆண்டு ஒவ்வொரு வனத்தின்படியும் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கடந்த இரண்டு வருட காலத்தில் குறிப்பிட்ட வனப் பிரதேசங்களை தனியாக அல்லது குழுவாக வெட்டித் துப்புரவு செய்தமை தொடர்பாக கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) முறைப்பாடுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஒவ்வொரு முறைப்பாட்டின் படிவெவ்வேறாக யாவை;

(iii) பலவந்தமாக கைப்பற்றப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரு மாகாணங்களினதும் வன ஒதுக்கங்களுக்கு உரியதான காணிகளை மீண்டும் சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) ஆமெனில், அது எத்தினத்தில்;

என்பதை அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2015 திசெம்பர் 04, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

117/'15

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.05.01 ஆம் திகதியன்று வெற்றிடமாகிய கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகப் பதவிக்கு உத்தியோகத்தரொருவரை நியமிப்பதற்கான முறையியல் யாதென்பதையும்;

(ii) மேற்படி பதவியை வகிப்பதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய கல்விசார் மற்றும் அரசாங்க சேவையிலான உரிய அடிப்படை தகைமைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) 2014.06.02 ஆம் திகதியன்று மேற்படி பதவிக்கு தற்காலிக அடிப்படையில் இணைக்கப்பட்ட இந்திராணி மங்கலிகா விக்கிரமநாயக்க எனும் உத்தியோகத்தரின் கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iv) இவர் 2003.03.03 ஆம் திகதி முதல் 2013.02.11 ஆம் திகதி வரை நிரந்தர அரச சேவையில் எவ்வளவு காலம் கடமையாற்றியுள்ளார் என்பதையும்;

(v) கரையோர பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகம் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக உத்தியோகத்தரொருவரை நியமிக்க வேண்டியவர் யாரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி உத்தியோகத்தருக்கு எதிராக நிதி மோசடி சம்பந்தமாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய உத்தியோகத்தரொருவருக்கு பணிப்பாளர் நாயக பதவியை வழங்குவதற்கான சட்டரீதியான அடிப்படை யாதென்பதையும்;

(iii) மேற்படி பதவியை வலுவற்றதாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எப்போதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

128/ '15

கௌரவ புத்திக பத்திரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொன்றுதொட்டு இருந்துவருகின்ற உள்நாட்டு நெல்லினங்களை பயிரிடுவதற்காக விவசாய இரசாயனப் பொருட்கள் அவசியமாகாது என்பதையும்;

(ii) உள்நாட்டுப் பண்டைய நெல்லினங்களை பயிரிடுகையில் ஆகக்குறைந்த அளவு நீர் அவசியமாவதோடு பாரம்பரிய வழிமுறைகளைக் கையாள்வதால் சுற்றாடலுக்கும் மனிதனுக்கும் ஏற்படுகின்ற சேதம் குறைவானதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இன்றளவில் இனங்காணப்பட்டுள்ள இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பண்டைய நெல்லினங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நெல்லினங்களின் பெயர்கள் யாவை;

(iii) தற்போது பயிரிடப்படுகின்ற பண்டைய நெல்லினங்கள் யாவை;

(iv) ஏனைய பண்டைய நெல்லினங்கள் பயிரிடப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2014 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு பண்டைய நெல்லினங்களை விதைநெல்லாகப் பயன்படுத்தி பயிரிடப்படுகின்ற வயல்களின் ஏக்கரளவு யாது;

(ii) இலங்கை பூராவிலும் அத்தகைய விதைநெல்லை பரவச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில் அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 05, சனிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

129/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் ஆறுகளைச் சார்ந்ததாக அனுமதியற்ற மணல் அகழ்ந்தெடுத்தல், இரத்தினக்கல் அகழ்வு மற்றும் தங்க அகழ்வு நடைபெறுகின்றதென்பதையும்;

(ii) இதனால் ஆறுகளுக்கு பாரியளவில் சேதமேற்படுகின்றதென்பதையும்;

(iii) இது மக்கள் வாழ்க்கையிலும் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதையும்;

(iv) ஏற்புடைய நிறுவனங்களில் மேற்படி முறையற்ற செயற்பாடுகளைத் தடுக்க போதியளவு வசதிகள் இல்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆறுகளைச் சார்ந்ததாக இடம்பெறுகின்ற குறிப்பிட்ட முறையற்ற செயற்பாடுகளைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில் அந்நடவடிக்கைகள் யாவை;

(iii) 2013.01.01 ஆந் தேதியிலிருந்து 2014.06.30 ஆந் தேதி வரை (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட தவறுகள் தொடர்பாக கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது;

(iv) அவை சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள் ஒவ்வொரு முறைப்பாட்டுக்கிணங்க வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி சுற்றாடல் சேதங்களைத் தடுக்க தற்போது நிலவுகின்ற சட்டமுறைமை போதுமானதாக உள்ளதா;

(ii) இன்றேல், நிலவுகின்ற சட்டங்களை மாற்றியமைக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

142/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் நிதியாண்டில் நட்டமடைந்த அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாவை என்பதையும்;

(ii) அந்த நிறுவனங்கள் அடைந்த நட்டம் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் பிற அரச நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய பணத்தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) நட்டத்தை ஈடுசெய்வதற்காக மேற்படி நிறுவனங்களுக்கு பொதுத் திறைசேரி மூலம் வழங்கப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு நிறுவன ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி நட்டத்துக்கான காரணங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அக்காரணங்கள் ஒவ்வொரு நிறுவன ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2016 சனவரி 08, வெள்ளிக்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 6/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக் கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 10/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 11/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேர்தல்கள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/ ‘15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/ ‘15

கௌரவ புத்திக பத்திறண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 16/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுக்களை தாபித்தல்,— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 19/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 21 / ’15

கௌரவ புத்திக பத்திறண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22 / ’15

கௌரவ புத்திக பத்திறண,— புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.23/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.26/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.27/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.28/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.29/’15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.30/’15

கௌரவ புத்திக பத்திறண,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.31/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.32/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.33/ '15

கௌரவ புத்திக பத்திறண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.34/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.35/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக ஆக்குதல்,— நாட்டின் அனைத்து அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கலைக் கல்விகளுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக மாற்றி அதன் மூலமாக உருவாகின்ற பட்டதாரிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.36/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற வான்களுக்கான தரநியமங்களை விதித்தல்,— நாடு பூராவும் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் உரிய தரத்தில் இல்லாமையினாலும், சில பாடசாலை வான்களின் ஊழியர்களது நடத்தை சிறந்ததாக இல்லாமையினாலும், உரிய தரநியமங்களுடன் கூடிய வான் சேவையொன்றை நடாத்துவதற்காகவும், மேற்படி சேவையைப் பெறுகின்ற பாடசாலை மாணவ மாணவிகளது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் வான் சேவைகளுக்கான தரநியமங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும், வான் ஊழியர்களிடையே சிறந்த பழக்க வழக்கங்களைப் பேணிவருவதற்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.37/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய மற்றும் சர்வதேச எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுத்தல்,— தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தினரின் எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு கைத்தொழில் மற்றும் கமத்தொழில் உற்பத்திகள் தொடர்பாக எதிர்வுகூறலை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட உற்பத்திகள் சார்ந்த சகல துறைகளுடனான இடைத் தொடர்புகளின் ஊடாகவும் நவீன தொழிநுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தியும் உற்பத்திச் செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.38/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கை மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு டிஜிடல் நூலகமொன்றை தாபித்தல்,— இலங்கை மக்களின் மரபார்ந்த அறிவை பாதுகாத்து, போஷித்து அதனை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்வதற்கும், மரபணு வளங்கள் மற்றும் உயிர் மரபுரிமைகளின் தவறான பயன்பாட்டை தடுப்பதற்காகவும் விரிவான தேசிய வேலைத்திட்டமொன்றின் தேவை உணரப்பட்டுள்ளதாலும் சுற்றாடல், சுதேச மருத்துவத் துறை, கமத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் உள்ளடங்கலாக சகல துறைகளுக்கும் டிஜிடல் தொழிநுட்பத்துடனான நவீன நூலகமொன்றை தாபிப்பதற்கும், அதன் பொருட்டு உலக புலமைச்சொத்து அமைப்பு (WIPO ), இலங்கை புலமைச்சொத்து பணியகம், சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்வகைமை அலகு உள்ளடங்கலாக சகல துறைகளும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.39/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவைப் பேணிப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவு கையாளப்படும் மருத்துவ முறைகள், கமத்தொழில், உணவுப் பாதுகாப்பு, கைப்பணிக் கைத்தொழிற்றுறை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் காணப்படும் மரபார்ந்த அறிவை பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட துறையில் ஈடுபட்டுள்ள மக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு, உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் உள்ளிட்ட ஏற்புடைய துறைகள் ஒருங்கிணைந்து தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.40/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைக்கே தனித்துவமானதும் மருத்துவ ரீதியில் பெறுமதிமிக்கதுமான தாவரங்களின் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தைப் பெற்றுக்கொள்ளல்,— வெளிநாடுகள் இலங்கைக்கே தனித்துவமான, பெறுமதிமிக்க மூலிகைத் தாவரங்களின் விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்தினைக் கண்டறிந்து, அவற்றிற்கு மோசடியான முறையில் ஆக்க உரிமம் பெறுவதைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்கும் ஔடத உற்பத்தி மற்றும் அதன் மேம்பாட்டிற்கு அக் கூறுகளைப் பயன்படுத்துவதற்கும் உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அனைத்து நிறுவனங்களும் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.41/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களை கைவிடல்,— ஜனாதிபதி, பிரதம அமைச்சர் உள்ளிட்ட பாராளுமன்றம், மாகாண சபைகள், பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சகல மக்கள் பிரதிநிதிகளும் மாதாந்தம் தாம் ஆற்றும் சேவைக்குரிய சம்பளம் மற்றும்/அல்லது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதுடன், மேற்படி எந்தவொரு பதவியும் தன்னலமின்றி மேற்கொள்ளப்படுகின்ற கௌரவ சேவைகளாக இல்லாமையினாலும், மேற்படி பதவிகளை வகிப்பவர்களின் பெயர்களுக்கு எதிரே அல்லது பதவிக்கு எதிரே அதிமேதகு, பிரபு அல்லது கௌரவ ஆகிய பெயர்கள் மற்றும் பெயருக்குப் பின்னால் அவர்கள் போன்ற பதங்களை பயன்படுத்துவதானது நகைப்புக்குரிய விடயமாக மாறியுள்ளதனாலும், மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.42/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரித்தல்,— பல்வேறு தரப்பினரால் முதிய பிரசைகள் புறக்கணிக்கப்படுவதால் நேரிடுகின்ற அநீதிகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.43/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— 60 வயதைத் தாண்டியுள்ள முதியோர் சமுதாயத்தினரின் வாழ்வாதார வழிமுறைகளை வலுவூட்டி இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு வங்கி முறைமையின் ஊடாக கடன் வழங்கும் முறையியல் ஒன்று அமுல்படுத்தப்படாமையானது அவர்கள் சமூகத்தினுள் வித்தியாசமாகக் கவனிக்கப்படுவதாகும் என்பதால் அத்தகைய அநீதியான நிலைமையைத் தடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.44/ '15

கௌரவ புத்திக பத்திறண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 45/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறை தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்த்தல்,— இலங்கையின் எதிர்கால இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவும், மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் பாடசாலை பாடத் திட்டத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வியை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு கல்வியியற் கல்லூரியொன்றை தாபித்தல்,— இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கேற்ப மேற்படி துறையில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கேற்ற வகையில் பாடசாலை மட்டத்தில் அதனை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை தொடர்பாக கல்வியியற் கல்லூரியொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 47/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்தல்,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் 25-30 வருடங்கள் பழமையான பாடத் திட்டங்களின் கீழேயே நடைபெறுவதால், அந்நிலைமையை மாற்றியமைக்கும் பொருட்டு மேற்படி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 48/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்தல்,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த நேரடி மற்றும் மறைமுக தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ள இலங்கையில் வாழும் இளைஞர்கள், ஓய்வுபெற்ற முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் ஆகிய சமூக குழுக்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்திக்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் குறித்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களது முனைப்புடனான பங்களிப்பை தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 49/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கை/சுதேச சமையற்கலை தொடர்பில் நாட்டினுள் மக்கள் மனப்பான்மைகளை வளர்த்தல்,— இலங்கை/சுதேச சமையற்கலை பற்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே அதிக ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நாட்டினுள் மக்களின் மனப்பான்மைகளை இதன்மீது செலுத்துவதற்காக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் பாடநெறியில் சமையற்கலையை ஒரு பாடமாக சேர்ப்பதற்கும், அரச மற்றும் தனியார் துறை தலையீட்டின் அடிப்படையில் ஆராய்ச்சித் துறைகளை ஊக்குவிப்பதன் ஊடாக புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளவும், இதனோடு தொடர்புடைய நிறுவன முறைமைகளை இணைத்து சான்றிதழ், டிப்ளோமா, பட்டம், பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை உருவாக்குவதன் மூலம் இத் துறை பற்றி மக்கள் மத்தியில் விரிவான விதத்தில் மனப்பான்மை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 50/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது சுவையூட்டல் மற்றும் கலவையாக்கல் கலை, சமையற்கலை, நிறமூட்டல், உணவு வெட்டுதல் உள்ளிட்ட பல பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் இதனோடு இணைந்துள்ள இலங்கையின் உணவுக் கலாசாரம் பற்றி கற்றல், கற்பித்தல் வழிமுறைகள் ஊடாக எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதற்கும் அதேபோன்று உள்நாட்டு, வெளிநாட்டு மக்களிடையே எமது உணவுக் கலாசாரத்தை பரப்புவதன் ஊடாக இலங்கையின் தனித்துவத்தை சர்வதேச ரீதியாக மேலோங்கச் செய்வதற்குமான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்களின் ஆராய்ச்சிகளுக்கான ஆய்வுக் கட்டுரைகளை அமைச்சுக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டு தயாரித்தல்,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்கள் தமது பாடநெறிகள் தொடர்பில் சமர்ப்பிக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை நாட்டின் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்துதல் முக்கியமானதாகையால், மேற்படி ஆய்வுக் கட்டுரைகளை மேற்பார்வை செய்யும் பேராசிரியர்களுக்கும் ஆய்வுக் கட்டுரைகள் ஏற்புடையதாகும் அமைச்சுக்களுக்கும் இடையில் சிறந்த தொடர்பினை ஏற்படுத்தும் முகமாக, குறித்த அமைச்சின் உத்தியோகத்தரொருவரை நியமிப்பதன் மூலம் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் மூலம் அமைச்சின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் நடைமுறை இலக்குகளை பூர்த்தி செய்யக் கூடிய விதத்திலான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமன இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 52/ '15

கௌரவ புத்திக பத்திறண,— 18 வயது நிரம்பியவுடன் தேருநர் இடாப்புகளில் பெயரைச் சேர்த்தல்,— தேர்தல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் தேருநர் இடாப்புகளைத் திருத்தும் திகதிக்கு பின்னர் அல்லது முன்னரான திகதியில் 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களுக்கு உரிய வயது நிரம்பிய திகதியிலேயே தேருநர் இடாப்புகளில் தமது பெயரை சேர்க்கக் கூடிய விதத்தில் நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 53/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையினுள் சேலைன் உற்பத்திக்கான முறையான வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்,— இலங்கையினுள் வருடாந்தம் பாரியளவில் சேலைன் பயன்படுத்தப்படுவதுடன், சேலைன் இறக்குமதிக்காக பாரியளவு நிதி வருடாந்தம் வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுவதால், மேற்படி வெளிநாட்டுச் செலாவணியை நாட்டினுள் சேமிக்கும் நோக்கத்துடன், இலங்கையினுள் காணப்படுகின்ற உள்நாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேலைன் உற்பத்தி செய்வதற்கு அரச, தனியார்துறை அல்லது கூட்டுறவுத்துறையை இணைத்துக் கொண்டு முறையானதொரு வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்டு புதிய உற்பத்திகளை உருவாக்குதல்,— இலங்கையில் வருடாந்தம் பெருமளவில் தேங்காய் நீர் விரயமாவதால், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முறைசார்ந்ததொரு வேலைத்திட்டத்தின் கீழ் தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்ட புதிய உற்பத்திகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்டு உருவாக்குவதற்கான முறையியலொன்று அமுல்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 55/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கடலில் புதிய வளங்களை ஆய்வு செய்தல்,— மிகப் பெரிய கடற் பிராந்தியத்தைக் கொண்டுள்ளதொரு நாடான இலங்கை, மீன்பிடிக் கைத்தொழிலுக்கு மாத்திரம் முன்னுரிமையளித்துள்ளதோடு, கடல் சார்ந்ததாக பெருமளவு இயற்கை வளங்கள் காணப்படுவதால், நாட்டுக்கு பெரும் எண்ணிக்கையிலான தொழில்வாய்ப்புகளையும், செல்வத்தையும் ஈட்டும் நோக்கத்துடன் கடல் வளங்கள் தொடர்பாக முறைசார்ந்த மேலதிக ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 56/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் மீன் வளத்தை வெளிநாட்டவர்கள் பிடிப்பதைத் தடுத்தல்,— இலங்கையின் மீனவர்களுக்கு பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்துகின்ற வகையில் இலங்கை கடற் பிராந்தியத்திலுள்ள மீன் வளம் வெளிநாட்டவர்களினால் பிடிக்கப்படுவதால், இலங்கை கடற் பிராந்தியத்தில் மீன் பிடிப்பதையும், வெளிநாட்டுப் படகுகள் மீன் பிடிப்பதற்கான இறங்குதுறையாக பயன்படுத்துவதையும் தடுப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 57/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பலா உற்பத்தியை அதிகரிக்கச் செய்து அது சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்,— மிகவும் சுவையானதும், மருத்துவக் குணம் கொண்டதும், இரசாயனப் பதார்த்தங்கள் இன்றி பயிரிடக் கூடியதுமான பலாச் செய்கையை விஸ்தரிப்பதன் ஊடாக அது சார்ந்த உற்பத்திகளை அதிகரிக்கச் செய்து அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணியை எமது நாட்டினால் ஈட்டிக்கொள்ள முடியுமாயுள்ளதால், அது தொடர்பில் அரசாங்கத்தின் தலையீட்டுடன் முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 58/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்றை வருடாந்தம் ஒழுங்குசெய்தல்,— ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமெனில், முக்கியமாக கமத்தொழிலில் செழிப்புற்றிருத்தல் வேண்டுமென்பதால், நாட்டை வளப்படுத்தும் கமக்காரர்களுக்கு தமது தொழில் தொடர்பாக அபிமானம் ஏற்படும் வகையில் முறைசார்ந்ததொரு ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 59/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சலுகை விலையில் LED மின்குமிழிகளை நுகர்வோருக்கு வழங்குதல்,— இல்லங்களை ஒளியூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தரம் மிக்க LED மின்குமிழிகளின் விலை அதிகம் என்பதால், மின்சார சபை தலையிட்டு சலுகை விலையிலும் தவணைக் கொடுப்பனவு முறையிலும் இந்த மின் குமிழிகளை நுகர்வோருக்கு பெற்றுக் கொடுத்து தேசிய ரீதியில் பெருமளவில் மின்சாரத்தை சேமிப்பதற்கும், LED மின்குமிழிகளை மக்கள் மத்தியில் பிரபலய்படுத்துவதன் மூலம் மின்சார சபைக்கு மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கும் இயலுமானவாறு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 60/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சிறிய அளவிலான விளையாட்டுப் பொருட்கள் தொழிற்சாலைகளை விஸ்தரித்தல்,— இலங்கையினுள் விளையாட்டுப் பொருட்களுக்கு பாரியதொரு சந்தை காணப்பட்ட போதிலும், நாட்டினுள் அவை சிறிய அளவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்ற அதேவேளை, அதற்காக சீனா முதற்கொண்ட ஏனைய நாடுகளுக்கு பெருந்தொகை வெளிநாட்டுச் செலாவணி பாய்ச்சப்படுவதால், சிறியதொரு செலவினத்தை ஏற்க வேண்டியதான இக் கைத்தொழிலை கிராமியப் பிரதேசங்களில் விஸ்தரிக்கும் பொருட்டு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 61/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையில் மருந்தாக்கல் தொழிற்சாலைகளை ஆரம்பித்தல்,— இலங்கையில் மருந்தாக்கலானது தற்போது ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாலும், மருந்துகளின் இறக்குமதிக்கென வருடமொன்றில் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணி செலவிடப்படுவதாலும், முன்னேற்றமடைந்த மனித வளத்தைக் கொண்டதொரு நாடு என்ற வகையில் இலங்கைக்கு அத்தியாவசியமான மருந்து வகைகளை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்வதற்கான வசதிகளை அரசாங்கத்தின் தலையீட்டுடன் பெற்றுக்கொடுத்து மருந்தாக்கல் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 62/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலை பாடத்திட்டத்தில் உளவியல் பாடத்தைச் சேர்த்தல்,— பாடசாலை மாணவர் சமுதாயத்தை ஆரோக்கியமான மனநிலை கொண்ட, சாதுரியமான முடிவுகளை எடுக்கக் கூடியவர்களாக தயார்படுத்தும் பொருட்டு ஆறாம் தரத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பௌத்த உளவியல் மற்றும் மேலைத்தேய உளவியல் ஆகிய இரண்டு பாடங்களையும் ஒருங்கிணைத்து முறையாக தயாரிக்கப்பட்ட “உளவியலும் தியானமும்” என்ற பெயரில் ஒரு பாடத்தை பாடசாலை பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 63/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஓய்வுபெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைத்தல்,— ஓய்வு பெற்றவர்களுக்கான உளவள ஆலோசனைச் சேவைகள், மருத்துவ வசதிகள் மற்றும் பகல்நேர காப்பக சேவைகள் ஆகிய வயோதிகர்களுக்குத் தேவையான பல்வேறு நலன்புரிச் சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைப்பதற்கும், மேற்படி நிலையங்களை மையப்படுத்தி ஏதேனும் உற்பத்தி நடவடிக்கையில் ஓய்வு பெற்றவர்களை ஈடுபடுத்துவதன் ஊடாக அவர்களின் வாழ்க்கைக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கின்ற அதேவேளை, மேலதிக வருவாயை ஈட்டிக்கொள்ளக் கூடிய வகையிலும் அரசாங்கத்தின் தலையீட்டுடன் நாடு முழுவதிலும் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 64/ '15

கௌரவ புத்திக பத்திறண, — ஓய்வுபெற்றவர்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்தல்,— ஓய்வு பெற்றுள்ள அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கும், அவர்களுடைய நலன்புரி நடவடிக்கைகளுக்குத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 65/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றுலாத் துறை வழிகாட்டுநர்களைப் பயிற்றுவித்தல்,— சுற்றுலாப் பயணிகளுக்கு பயன்மிக்கதும், கண்ணியம் மிக்கதுமான சேவையை வழங்குபவர்களாக ஆக்குவதற்கும் மேலும் இவர்களது வாழ்க்கைத் தொழில் மட்டத்தை உயர்த்துவதற்குமாக சுற்றுலாத் துறை வழிகாட்டுநர்களைப் பயிற்றுவிப்பதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 66/ '15

கௌரவ புத்திக பத்திறண,— காணி தொடர்பில் வலுவிலுள்ள சட்டங்களைத் திருத்துதல்,— இலங்கையில் தற்போது போலியான உறுதிகளைத் தயாரித்து காணிகளை விற்பனை செய்யும் மோசடிச் செயலொன்று நடைபெற்று வருவதோடு, இவ்விடயம் தொடர்பில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால், காணி உரிமை பற்றிய பாதுகாப்பு மேம்படுத்தப்படும் வகையிலும், தவறாளிகளுக்கு கடுமையான தண்டனைகளை வழங்கக்கூடிய வகையிலும் வலுவிலுள்ள சட்ட முறைமை திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 67/ '15

கௌரவ புத்திக பத்திறண, — இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் பவளப்பாறைகளை பாதுகாத்தல்,— இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் அமைந்துள்ள பவளப்பாறைகள் மனிதர்களின் செயற்பாடுகளால் அழிவுறும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதால், மேற்படி பவளப்பாறைகளை பாதுகாப்பதற்காக மனித செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கேற்றவாறு தனிநபர் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தையும் சட்ட வரையறையில் மாற்றத்தையும் ஏற்படுத்துவதற்காக கல்விமான்கள் குழுவொன்றின் ஊடாக பொருத்தமான வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 68/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான்களில் பெண்களை சேவைக்கு அமர்த்துதல்,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான் சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும் மேற்படி வான்களில் பயணிக்கின்ற பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருதியும் சகல பாடசாலை வான்களிலும் பணியாற்றுவதற்கு பெண்கள் அமர்த்தப்படுவதை கட்டாயமாக்குவதற்கான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 69/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மருந்துப் பொருட்களின் விலையை குறைத்தல்,— இலங்கையினுள் தேசிய ஔடதக் கொள்கையினை பிரகடனப்படுத்தி, ஔடதங்களின் பெயரில் மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை துரிதமாக ஆரம்பிப்பதன் மூலம் மருந்துப் பொருட்களின் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் தலையிடுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 70/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இணையத் தளத்தின் ஊடாக நடைபெறுகின்ற மருந்துப் பொருட்கள் விற்பனை உள்ளிட்ட மோசடிச் செயல்களைத் தடுத்தல்,— தற்போது இணையத் தளத்தின் ஊடாக தரமற்ற மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மேனிவணப்புப் பொருட்களின் உற்பத்திகள் பாரியளவில் விற்பனை செய்யப்படுவதுடன், இத்தகைய மோசடிச் செயல்கள் எமது நாட்டு மக்களின் ஆரோக்கியத்துக்கும் நல்லிருப்புக்கும் பாரியதொரு அச்சுறுத்தலாகும் என்பதால், இவற்றைத் தடுப்பதற்கான உரிய வேலைத் திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துதல் உகந்ததாகுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 71/ '15

கௌரவ புத்திக பத்திறண,— விவசாய இரசாயனப் பொருட்களின் பாவனையின்றி பயிர்ச் செய்கை செய்தல்,— அதிக நச்சுத்தன்மையுடைய விவசாய இரசாயனப் பொருட்களை இலங்கையில் தடை செய்து, பழைமைவாய்ந்த முறையில் சூழலுக்குகந்த பயிர்ச்செய்கை முறையொன்றை நாட்டில் அறிமுகம் செய்வதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு விவசாய விஞ்ஞானிகள் மற்றும் சூழலியலாளர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்து அவர்களிடமிருந்து பெறப்படும் பரிந்துரைகளின் ஊடாக மக்களுக்கு நச்சுத்தன்மையற்ற ஆரோக்கியமான உணவை பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் பொருத்தமாகுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 72/ '15

கௌரவ புத்திக பத்திறண,— போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாவதிலிருந்து பாடசாலை மாணவர்களை மீட்டெடுத்தல்,— தற்போது இலங்கையில் பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகின்ற போக்கு அதிகரித்துள்ளதால், பாடசாலை மாணவர்களை போதைப் பொருள் பாவனையிலிருந்து மீட்டெடுப்பதற்காக அரசாங்கம் தலையிட்டு முறைசார்ந்ததொரு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 73/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய உற்பத்தித்திறன் குழுவொன்றை நியமித்தல்,— அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டங்களின் போது தமது நிறுவனங்களை மிகஉயர்ந்த உற்பத்தித்திறன் மட்டத்தை நோக்கி வழிநடாத்தியுள்ள நிறுவனத் தலைவர்களை இனங்கண்டு அவர்களின் அறிவையும், அனுபவங்களையும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில், அந்நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முறையியல்களை ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்றவகையில் பதிலீடு செய்யக்கூடியவாறு மேற்படி நிறுவனத் தலைவர்களை உள்ளடக்கியதாக தேசிய உற்பத்தித்திறன் குழுவொன்றை தாபித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 74/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சமுதாய மருத்துவமுறை பற்றிய நிபுணத்துவச் சேவையை மேம்படுத்தல்,— சுகாதார சேவையின் அத்தியாவசிய பிரிவொன்றான சமுதாய மருத்துவமுறை தொடர்பான நிபுணத்துவத்துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும், அத்துறையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை அவதானித்து துரிதமாக தீர்த்து வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 75/ '15

கௌரவ புத்திக பத்திறண, — ஆங்கிலேயர்களால் தேசத் துரோகிகளாக வர்ணிக்கப்பட்ட இலங்கையர்களை தேசிய வீரர்களாக பிரகடனம் செய்தல்,— 1815 ஆம் ஆண்டு தொடக்கம் 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெறுதல் வரையான காலப்பகுதியில் ஆங்கிலேயர்களுக்கெதிராக நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் உயிரையும் பொருட்படுத்தாது போராடிய இலங்கையர்கள் தேசத் துரோகிகளாக வர்ணிக்கப்பட்டுள்ளதோடு, இவர்கள் அனைவரையும் விசேட வர்த்தமானப் பத்திரிகையொன்றின் மூலம் தேசிய வீரர்களாக பிரகடனம் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.76/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் சந்தைக்கு வருவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல்,— நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற, சந்தைப் படுத்துகின்ற மற்றும் அதற்குப் பக்கபலமாக உள்ள ஆட்கள் மற்றும் நிறுவனங்களை சுற்றிவளைப்பதற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் விசேட சுற்றிவளைப்புப் பிரிவுக்குக் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து, தேவையான வசதிகளை குறைவின்றி பெற்றுக்கொடுப்பதற்கும், குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கக் கூடிய வகையில் வலுவிலுள்ள சட்ட முறைமையை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.77/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நச்சுத்தன்மையற்ற உணவுற்பத்தியை ஊக்குவித்தல்,— உணவுடன் தொடர்புடைய உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களை இலக்காகக் கொண்டு, தரத்தில் உயர்ந்ததும், ஆரோக்கியமானதுமான உணவுகளை நுகர்வோருக்கு வழங்குவதன் மூலம் நாட்டுக்கு ஆற்றக்கூடிய சேவை தொடர்பாக விழிப்புணர்வூட்டி, மனோபாவ ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், அவ்வாறு நச்சுத்தன்மையற்ற உணவுகளை உற்பத்தி செய்கின்ற தொழில்முயற்சியாளர்களுக்கு கௌரவப் பட்டத்துடன்கூடிய விருது வழங்கி அவர்களை ஊக்குவிப்பதற்குமான வேலைத் திட்டமொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.78/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முறைகேடான விதத்தில் கைப்பற்றப்பட்டுள்ள சரணாலயங்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவித்தல்,— இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சரணாலயங்களுக்குச் சொந்தமான காணிகள் பல்வேறான ஆட்கள் மற்றும் அமைப்புகளால் சட்ட விரோதமான முறையில் கைப்பற்றப்பட்டுள்ளதால், மேற்படி காணிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் துரிதமாக தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 79/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆதிவாசி மக்களின் மேம்பாட்டுக்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இலங்கையினுள் தற்போது வசிக்கும் ஆதிவாசி மக்கள் பற்றிய தனியானதொரு தொகை மதிப்பீட்டை மேற்கொண்டு, அவர்கள் உயிர் வாழ்வதில் தற்போது எதிர்நோக்கும் சிரமங்களை முறைசார்ந்த விதத்தில் இனங்கண்டு, அவர்கள் கௌரவமாக வாழக் கூடிய ஒரு சூழலை அமைத்துக் கொடுப்பதற்குத் தேவையான சாதகமானதொரு திட்டத்தை, ஆதிவாசிகளின் தலைவர்களும் உள்ளடங்கிய விதத்தில் நியமிக்கப்பட்ட கல்விமான்கள் குழுவொன்றின் ஊடாக நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 80/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் யுத்தத்தினால் சேதமடைந்த தொல்பொருட்களை பாதுகாத்தல்,— முப்பது ஆண்டு கால யுத்தம் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்பட்ட தொல்பொருட்கள் பெருமளவில் அழிவடைந்ததோடு, இருப்பிலுள்ள தொல்பொருட்கள் பற்றிய மதிப்பீடொன்றை மேற்கொண்டு தகவல்களை திரட்டுவதையும், குறித்த தொல்பொருட்களை உறுதி செய்தல், பாதுகாத்தல் மற்றும் புனரமைப்பதையும் நோக்கமாகக் கொண்டு தொல்பொருளியலாளர்களை உள்ளடக்கிய கல்விமான்கள் குழுவொன்றை நியமித்தல் உசிதமாகுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.81/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பயிர்ச் செய்கைக்கான உள்நாட்டு விதைகளை பிரபல்யப்படுத்துதல்,— விவசாய இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படாது உள்நாட்டு சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி பயிரிடக்கூடிய உள்நாட்டு விதை வகைகளை இனங்கண்டு அத்தகைய விதைகளை துரிதமாக நாடுபூராவும் பரவலாக்கி இரசாயன நச்சுத்தன்மையற்ற உணவுப் பொருட்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான ஆராய்ச்சிகள், தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்குத் தேவையான திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 82/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டு மொழிகள் கற்கைக்கான வசதிகளை வழங்கல்,— தனி நபர் அறிவாற்றலை தீர்மானிப்பதற்கு அவரிடமுள்ள மொழியறிவு முதன்மையான காரணியாக அமைவதால் ஆங்கில மொழி தவிர்ந்த ஏனைய முதன்மையான அந்நிய மொழிகளை கற்பதற்குத் தேவையான வசதிகளை விஸ்தரிப்பதற்குத் தேவையான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 83/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அனைத்து தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கும் செலவிடப்படுகின்ற நிதியை மட்டுப்படுத்தல்,— இலங்கையினுள் நடைபெறுகின்ற அனைத்து தேர்தல்களின் போதும் சில வேட்பாளர்கள் பாரியளவில் நிதியை செலவிடுவதுடன், நிதி செலவிட முடியாத போதிலும், நாட்டுக்கு சேவையாற்றக்கூடிய கல்விமான்கள் சிலருக்கு இதனால் பாதகமான நிலைமை ஏற்படுவதன் காரணமாக தேர்தல்களுக்கு செலவிடப்படுகின்ற நிதியின் அளவை மட்டுப்படுத்தக்கூடியவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.84/ '15

கௌரவ புத்திக பத்திறண,— காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட தொல்பொருட்களை மீண்டும் பெற்றுக் கொள்ளல்,— இலங்கை காலனித்துவ நாடாக காணப்பட்ட காலத்தில் எமது நாட்டிலிருந்து போர்த்துக்கள், ஒல்லாந்து மற்றும் பெரிய பிரித்தானியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட தொல்லியல் பெறுமதிமிக்க பொருட்கள் பற்றிய ஆய்வொன்றை நடாத்தி அப்பொருட்களை மீண்டும் எமது நாட்டுக்குப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 85/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிக்குமார் நீதிமன்றமொன்றை தாபித்தல்,— பிக்குமார்களின் பாதுகாப்பு மற்றும் கௌரவத்தை பேணிப்பாதுகாப்பதற்காக அவர்கள் தொடர்பான நீதிமன்ற விடயங்களுக்காக தனியான பிக்குமார் நீதிமன்றமொன்றை தாபித்தல் வேண்டுமெனவும் அந்த நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு சட்ட ரீதியிலான அதிகாரத்தைப் பெறக்கூடிய வகையில் மேற்படி பிக்குமார் நீதிமன்றம் தாபிக்கப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 86/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நியதிச்சட்ட பிக்குமார் சபையொன்றை நியமித்தல்,— பாராளுமன்றம் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்கும் கட்டளைச் சட்டங்களுக்கு திருத்தங்களை முன்வைக்கக் கூடியதுமான சட்ட அதிகாரமுள்ள பிக்குமார்களின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்பட்ட பொதுநிர்வாகம், சட்டம், வெளிநாட்டலுவல்கள் மற்றும் சமூக செயற்பாடுகள் தொடர்பாக சிறந்த அறிவையும் அனுபவத்தையும் கொண்டுள்ள கல்விமான்களான பிக்குமார்களை உள்ளடக்கிய நியதிச்சட்ட பிக்குமார் சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 87/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நீர்ப்பாசனக் கலாசார கற்கை நிறுவனமொன்றைத் தாபித்தல்,— இலங்கையில் காணப்பட்ட நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்திற்கும், வாவிகள் தொழில்நுட்பத்திற்கும் புத்துயிரூட்டி பேணிப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், கற்கை நெறிகள் மூலம் மேற்படி விடயம் தொடர்பில் அறிவு நிறைந்தவர்களை உருவாக்க இயலுமான வகையில் "நீர்ப்பாசனக் கலாசார கற்கை நிலையம்" என்ற பெயரில் நிறுவனமொன்றை அரசாங்கத்தின் தலையீட்டுடன் ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 88/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மகாவம்ச கற்கைக்கான நிறுவனமொன்றைத் தாபித்தல்,— இலங்கை வரலாற்றின் சுவடாக விளங்கும் மகாவம்சத்தைக் கற்பதற்காக பிக்குமாரின் தலையீட்டுடன் "மகாவம்சக் கற்கை ஆய்வு தேசிய நிறுவனம்" என்ற பெயரில் நிறுவனமொன்றை அரசாங்கத்தின் அனுசரணையுடன் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 89/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பௌத்த விரோத செயற்பாடுகளை தடுத்தல்,— அற நூல்கள் மற்றும் வெளியீடுகளை ஆய்வு செய்யும் மேன்மையான அறிவைக் கொண்ட சட்ட அதிகாரத்துடன் கூடிய கற்றோர்களைக் கொண்ட சங்க சபையொன்றை தாபிப்பதன் மூலம், ஏதேனுமொரு ஆக்கத்தை வெளியிடுவதற்கு முன்னர் அதனை மேற்படி சபைக்கு சமர்ப்பித்ததன் பின்னர், சமூகமயமாக்குவதற்கு தகுதியில்லை எனில், திருத்தங்களை சமர்ப்பிப்பதற்கேற்றவாறான பொறிமுறையொன்றை உருவாக்குவதன் மூலம் பௌத்த விரோத செயற்பாடுகள், வெளியீடுகள் இயற்றப்படுதல் மற்றும் பௌத்த தர்மத்தை தொடர்புபடுத்தி பொய்யான வரைவிலக்கணங்கள் தோற்றம் பெறுவதை தடுப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 90/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசப்பற்றுடைய கலைப் படைப்புகளை பாராட்டுதல்,— தேசத்தின் மீது அன்பு மற்றும் சுயமரியாதை ஏற்படும் வகையில் சுதேச மற்றும் கலாசார விழுமியங்களுடன் கூடிய கலைப் படைப்புகளை வருடாந்தம் கௌரவிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 91/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் பாடசாலை மாணவ மாணவியர்களின் ஒழுக்கத்தை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— இலங்கையின் பாடசாலை மாணவ மாணவியர்களை ஆரோக்கியமான, உடல் நலம்மிக்க மற்றும் உடலுறுதி கொண்ட பிரஜைகளாக சமூகமயப்படுத்தும் நோக்கத்துடன் அவர்கள் தாம் விரும்பும் ஒரு விளையாட்டில் ஈடுபடுவதற்கும், நடைமுறை ரீதியிலான ஒழுக்கப் பயிற்சியில் ஈடுபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் வகுக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 92/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பௌத்த கலாசார தகவல் நிலையமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையினுள் அமைந்துள்ள பௌத்த மதத் தலங்கள், அதனுடன் இணைந்த இடைநேர்விளைவான பிரிவுகள் மற்றும் பௌத்த தேரர்கள் பற்றிய தகவல்களை சேகரித்து, முறைசார்ந்த ரீதியில் கணனிமயப்படுத்தி, நவீன தொழில்நுட்ப கருவிகள், போதியளவு மனித மற்றும் பௌதீக வளங்கள் நிறைந்த "பௌத்த கலாசார தகவல் நிலையம்" எனும் பெயரிலான நிறுவனமொன்று அரசின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 93/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அறநெறிப் பாடசாலை பாடநூல்களை காலத்திற்கேற்ப திருத்துதல்,— பரீட்சையை இலக்காகக் கொண்ட,— அறிவை மட்டும் மையப்படுத்திய பாடநூல்களுக்குப் பதிலாக செய்முறைப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட, அறிவை வளர்க்கக்கூடியதான, நாகரிகமானதொரு சமூகம் உருவாக்கப்படுவதை இலக்காகக் கொண்ட பாடநூல்களை புத்திஜீவிகளை உள்ளடக்கிய சபையொன்றின் ஊடாக தொகுத்து அறநெறிப் பாடசாலைகளுக்கு வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீமானிக்கின்றது.

பா. 94/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சர்வதேச பாடசாலைகளின் ஒழுங்குமுறையாக்கலுக்கான சபையொன்றை நியமித்தல்,— இலங்கையின் கலாசாரத்திற்கும், பண்பாட்டுக்கும், சமூக நல்லிருப்புக்கும் பொருந்தக்கூடிய வகையில் சர்வதேச பாடசாலைகளின் விடயப்பரப்புகளை தேவைக்கேற்ப ஒழுங்குமுறையாக்கக்கூடிய முழுமையான அதிகாரத்துடன் கூடிய சபையொன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 95/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய கல்வி ஆணைக்குழுவை மென்மேலும் முனைப்புடன் செயற்படச் செய்தல்,— சுதேச வரலாற்று அறிவு, பண்பாடுமிக்கதன்மை, உற்பத்திச் சாத்தியத்தன்மை, அறிவுடைமை, பாரம்பரிய அறிவு, தேசப்பற்று, ஆரோக்கியம், திறமைமிக்கதன்மை மற்றும் சிறந்த மனப்பாங்குகளைக் கொண்டிருத்தல் ஆகிய பண்புகளின் மூலம் பூரணத்துவம்மிக்க வெற்றிகரமான பிரசைகளை உருவாக்கக்கூடியவாறு அமைக்கப்பட்ட தேசிய கொள்கையின் ஊடாக ஒட்டுமொத்த கல்வித் திட்டத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய கல்வி ஆணைக்குழுவை மென்மேலும் முனைப்புடன் செயற்படச் செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.96/ '15

கௌரவ புத்திக பத்திறண,— குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணர் சேவையை மேம்படுத்தல்,— சுகாதார சேவையின் அத்தியாவசிய அம்சமொன்றான குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணத்துவத் துறையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை அவதானித்து அவற்றை துரிதமாக தீர்த்துவைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், மேற்படி குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணர் சேவையை மேம்படுத்துவதற்குமான திட்டங்களை வகுப்பதற்கும் பொருட்டு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 97/ '15

கௌரவ புத்திக பத்திறண, — ஆயுர்வேத மருத்துவர்களின் சேவையை வெளிநாடுகளுக்கு வழங்குதல்,— ஆயுர்வேத மருத்துவப் பட்டப்படிப்பை நிறைவுசெய்யும் பட்டதாரிகளுக்கு வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக முறைசார்ந்த வேலைத் திட்டமொன்றை அமைத்து நடைமுறைப்படுத்தல் உசிதமாகுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 98/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆயுர்வேத மருத்துவச் சட்டத்தை திருத்துதல்,— தற்போது வலுவிலுள்ள காலம் கடந்த ஆயுர்வேத மருத்துவச் சட்டம் மீதான திருத்தமொன்றைக் கொண்டு வந்து ஆயுர்வேத மருத்துவர்களின் தொழில் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்து, அந்த தொழிலுக்குரிய கௌரவத்தையும், மகத்துவத்தையும் பாதுகாக்க புதிய ஆயுர்வேத மருத்துவச் சட்டமொன்றை துரிதகதியில் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 99/ '15

கௌரவ புத்திக பத்திறண, — புகையிரத பாதுகாப்பு முறைமையொன்றை உருவாக்குதல்,— இலங்கையில் புகையிரத பாதுகாப்பு முறைமையை உருவாக்கிய புத்தாக்குநர்களையும், அத் துறையுடன் தொடர்புடைய கல்விமான்களையும், புகையிரதத் திணைக்களத்தின் சகல துறைகளினதும் விற்பன்னர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றின் மூலம் புகையிரத பாதுகாப்பு முறைமையொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 100/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பயணிகள் போக்குவரத்து சேவையின் தரத்தை மேம்படுத்தல்,— பேருந்து பயணிகள் போக்குவரத்து சேவையின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம், வருடாந்தம் அச் சேவையை நிராகரிக்கின்ற சுமார் 1% - 2% பயணிகளை தக்க வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம், அச் சேவையின் இருப்புக்கு நீண்ட கால அடிப்படையில் ஏற்படக்கூடிய ஆபத்தை குறைப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் பொருத்தமாகுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 101/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சிங்கள மொழிக்கு நியதியொன்றை வகுத்தல்,— சிங்கள மொழியில் எழுத்து வழக்கு மற்றும் பேச்சு வழக்கு இரு வகைகளை கொண்டுள்ளதோடு, න, ණ, ල, ළ வேறுபாடு, மெல்லின, வல்லின எழுத்துக்களை பயன்படுத்தல் மற்றும் சொல் வகைப்பாடு ஆகியன விவாதத்துக்குரியவையாக உள்ளதால் சிங்கள மொழிக்கென நியதியொன்றை வகுப்பதற்கு கல்விமான்கள் சபையொன்றை நியமித்து காலத்துக்கேற்ப ஏற்படும் மாற்றங்களையும் கவனத்திற்கொண்டு மொழியின் நிலைத்திருத்தலை உறுதிப்படுத்தக்கூடிய செயற்பாடொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.102/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உக்கிப்போகாத சேதனக் கழிவுப்பொருட்களின் மூலம் சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்துதல்,— பீடை கொல்லிகள் மற்றும் கைத்தொழில் செயற்பாடுகளிலிருந்து வெளியேறும் உக்கிப்போகாத சேதனக் கழிவுப்பொருட்கள் (Persistent Organic Pollutants – POPs ) பன்னிரண்டு வகை மாசாக்கல் காரணிகளை உள்ளடக்கியுள்ளதுடன், இவை மனிதனின் உடல் நலத்துக்கு மிகவும் பாதகமாயுள்ளதால், குறித்த இரசாயனப் பதார்த்தங்கள் சுற்றாடலுக்கு வெளியேற்றப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கு முறைசார்ந்த ஒரு வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.103/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அரசாட்சியில் பௌத்த தத்துவங்களை சேர்த்தக்கொள்ளல்,— சப்த அபரிஹானீய தர்ம, தச ராஜ தர்ம, ராஜோவாத ஜாதகய, குரு தர்ம ஜாதகய, கண்ட நிந்துக ஜாதகய, தெசதுர ஜாதகய, தேவதர்ம ஜாதகய, சதர சங்ரஹ வஸ்து, சக்கவத்தீ சிஹநாத சூத்ரய மற்றும் தர்ம பிரதீபிகாவ ஆகிய பௌத்த கற்பித்தல்கள் தொடாபில் பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் பிரதேச மட்டத்திலான சகல ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டுவதன் ஊடாக நாட்டின் நல்லாட்சிக்கு அவர்களது வகிபாக பங்களிப்பினை பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்திலான ஒரு வேலைத்திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 104/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலத்திரனியல் கழிவுகளை அகற்றுதல்,— புளோரசன்ட் மின்குமிழ், தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, மின் உபகரணங்கள், பட்டரி, கனணி மற்றும் அவற்றின் பாகங்கள் கழிவுப் பொருட்களாக சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுகையில் ஆசனிக், கட்மியம், பாதரசம் மற்றும் ஈயம் ஆகிய கன உலோகங்கள் சுற்றாடலில் சேர்க்கப்படுவதால், குறித்த இலத்திரனியல் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை தயாரித்து சுற்றாடலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 105/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நாட்டில் நல்லாட்சியை தாபித்தல்,— சீரற்ற ஆட்சியின் பண்புகளான தான்தோன்றித்தனமான கொள்கையாக்கம், அதிகாரவாதம், அமுலாக்கப்படாத மற்றும் அநீதியான சட்டங்கள், நிறைவேற்று அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல், அரசியலில் பிரஜைகளின் பங்களிப்பு குறைவடைதல் மற்றும் ஊழல் பரவுதல் ஆகிய விடயங்களை எமது நாட்டில் குறைவின்றிக் காணக்கூடியதாக உள்ளதோடு, இதன் காரணமாக நாட்டில் சீரற்ற ஆட்சி நிலவுகின்றமை தென்படுகின்றமையால், நாட்டில் நல்லாட்சியை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 106/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாடுகளிலுள்ள இலங்கைக்கு சொந்தமான சுவடிகளை மீளப்பெற்றுக்கொள்ளல்,— இலங்கைக்கு சொந்தமான பெறுமதியான பல சுவடிகள் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் காணப்படுவதுடன், இவற்றில் உள்ளடங்கியுள்ள அறிவை தற்போதைய இலங்கை சமூகம் இழந்துள்ளமையால், மேற்படி சுவடிகளை எமது நாட்டுக்கு மீளப் பெற்று இவற்றில் அடங்கியுள்ள புராதன அறிவை சமூகமயமப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது

பா. 107/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயிர் பல்வகைத்தன்மையை பாதுகாப்பதற்காக கமத்தொழிலின் பங்களிப்பைப் பெறுதல்,— தனிப் பயிர்ச்செய்கை முறைக்கு பதிலாக பல்வகைப் பயிர்ச்செய்கை முறை மற்றும் கலப்புப் பயிர்ச்செய்கை முறையை பிரபல்யபடுத்தல், உயிர் பல்வகைத்தன்மைக்கு கேடு விளைவிக்கும் இரசாயன பதார்த்தங்களை கமத்தொழிலிருந்து நீக்குதல் மற்றும் ஒன்றிணைந்த பீடை முகாமைத்துவ முறைமைகளை பயன்படுத்தல் ஆகியவற்றின் ஊடாக நாட்டில் உயிர் பல்வகைத்தன்மையை பாதுகாப்பதில் விவாசாயிகளை ஈடுபடுத்துகின்றதான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 108/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மக்களின் உணவு கிடைக்கும் உரிமையை பாதுகாத்தல்,— ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் கட்டமைப்புக்களுக்கு அமைய உணவு கிடைப்பதற்கான அடிப்படை உரிமையை இலங்கை மக்கள் இழக்கும் நிலைமை, அரசாங்க கொள்கை வகுத்தல் மற்றும் அமுல்படுத்துவதில் காணப்படுவதாலும், மேற்படி சமவாயங்களுக்கு அமைய நாட்டு மக்களின் உணவுப் பிரச்சினையை தீர்த்து வைக்கும் பொறுப்பு முற்றாக அரசாங்கத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாலும் அரசாங்கம் தலையீடு செய்து உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துகின்ற மற்றும் சுகாதார ரீதியில் பாதுகாப்பான உணவு நாட்டு மக்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்கின்ற முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை வகுத்து மக்களின் உணவு கிடைக்கும் அடிப்படை உரிமையை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 109/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அசேதனப் பொருட்களை முகாமைத்துவம் செய்தல்,— அசேதனப் பொருட்களை மீள்சுழற்சிக்கு உள்ளாக்குதலும், அசேதனப் பொருட்களின் உபயோகத்தைக் குறைப்பதும், உபயோகத்திலிந்து நீக்கப்படுகின்ற அசேதனப் பொருட்களை சேகரிப்பதற்குமான பொறிமுறையொன்றை அமைத்தல் மற்றும் அசேதனப் பொருட்களை பயன்படுத்துவதற்கான சுற்றாடல் சட்ட, விதிகளை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் சுற்றாடல் முறைமையின் பாதுகாப்பு மற்றும் நன்நிலைத்திருத்தலுக்காக அசேதனப் பொருட்களை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 110/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுதேச மருந்துகள் மற்றும் கைமருந்துகள் பற்றி பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டல்,— ஆரோக்கியமான தேசமொன்றைக் கட்டியெழுப்பல் மற்றும் சுதேச ஆயுர்வேதத்தின் நன்நிலைத்திருத்தலை அடிப்படை நோக்கமாகக் கொண்டு சுதேச மருந்து வகைகள் மற்றும் கைமருந்துகள் பற்றி முறைசார்ந்த விடய விளக்கங்களைக் கொண்ட பாடமொன்றை பாடசாலை பாடத்திட்டத்தில் உள்ளடக்குவதன் மூலம் சுதேச மருந்துகள் மற்றும் கைமருந்துகள் பற்றி பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 111/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தாய், சேய் போஷாக்கின்மையை ஒழித்தல்,— இலங்கையில் எடைகுறைந்த மகப்பேற்று வீதம் 25% எனும் உயர் பெறுமானத்தை கொண்டுள்ளதோடு, அதற்கான பிரதான காரணியாக அமைவது ஊட்டச்சத்துமிக்க உணவுப் பற்றுக்குறையே என்பதால், தாய், சேய் போஷாக்கின்மையை ஒழிப்பதற்குத் தேவையான ஊட்டச்சத்துமிக்க உணவுகளை வறியோர்களுக்கு வழங்குவதை முதன்மையாகக்கொண்ட வேலைத்திட்டமொன்று அமுலாக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 112/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடலைப் பாதுகாப்பதன் மூலம் ஆரோக்கியமான நாடொன்றைக் கட்டியெழுப்புதல்,— இன்று இலங்கையில் சுற்றாடல் மாசடைதல் அதிகரித்துள்ளமையால் நீர் மற்றும் உணவுகளில் கதிரியக்கத் தன்மை அதிகரித்துள்ளதோடு, எதிர்காலத்தில் மனிதனுக்குப் பீடிக்கின்ற ஒருசில நோய்களின் நோய்க் காரணிகளைக்கூட கண்டுபிடிப்பது சிரமமானதாக அமையலாம் என்பதால், இது தொடர்பாக மேலும் ஆய்வு செய்வதற்காக கல்விமான்கள் குழுவொன்றை நியமித்து அறிக்கையொன்றைப் பெற்று, அதன் விதப்புரைகளை அமுலாக்குவதன் ஊடாக நாட்டிலுள்ள மக்களின் ஆரோக்கியம் உறுதிசெய்யப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.113/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நாட்டின் பாதுகாப்புக்கு கமத்தொழிலைப் பேணுதல்,— முதலாளித்துவத்தின் மூன்றாவது கட்டமாகிய இரண்டாவது உலக மகா யுத்தத்துக்கு பிற்பட்ட காலத்தில் கமத்தொழில் வாழ்க்கை முறையானது பசுமைப் புரட்சியுடன் முழுமையாகவே மாற்றமடைந்த காரணத்தினால் தற்போதைய உலகளாவிய சமூகம் எதிர்கொண்டுள்ள சுற்றாடல் மாசடைதல், ஆரோக்கியத்தை இழத்தல் மற்றும் தூய்மையான உணவு காணப்படாமை, ஆகிய இடர்காண் நிலைமைகளிலிருந்து இலங்கையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மக்களை நிலைபேறான கமத்தொழில் பிரயோகங்களுக்கு ஊக்குவிப்பதன் மூலமும் விவசாயிகளைப் பாதுகாக்கும் அரச கொள்கைகளை நாட்டினுள் தாபிப்பதன் மூலமும் நாட்டின் எதிர்காலம் பேணப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 114/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சிக்கலான உலகளாவிய சந்தையின் காரணமாக மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் குறைத்தல்,— உலகமயமாக்கலின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட உலக வர்த்தக முறைகள் மனிதனின் மனதை ஆக்கிரமித்துள்ளதன் காரணமாக அவன் பரம்பரை பரம்பரையாகக் கொண்டு வந்த ஒழுக்க விழுமியங்களும் வளர்ச்சியடைந்த தத்துவக் கருத்துக்களும் மனித மனங்களிலிருந்து பறித்தெடுக்கப்படுதல் தற்காலத்தில் இலங்கையர்களுக்கும் பொதுவானதென்பதால், சந்தைப் பொருளாதாரத்தினுள் கட்டியெழுப்பப்படுகின்ற சிக்கலான வாழ்க்கை முறையையும் அதனைத் தொடர்ந்து எழுகின்ற சிக்கலான சமூகப் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொண்டு அமைதியான வாழ்க்கை முறையொன்றை நோக்கிச் செல்வது எவ்வாறு என்பது பற்றி மக்களை அறிவூட்டுவதற்குரிய வேலைத்திட்டமொன்றும் அறிவார்ந்த கருத்தாடலொன்றும் நாட்டினுள் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 115/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைக்குத் தேவையான சீனியை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்தல்,— சீனியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வளங்களை இலங்கை தன்னகத்தே கொண்டிருப்பதால், சிறந்த முகாமைத்துவத்துடன், வினைத்திறனாகவும் திட்டமிட்ட வகையிலும் செயலாற்றி நாட்டுக்குத் தேவையான சீனியை உற்பத்தி செய்வதற்கும் சீனியை சுத்திகரிப்பதற்கும் தேவையான தொழிற்சாலைகளை அரசாங்கம் தாபித்து சீனிக் கைத்தொழிற்துறையை பாதுகாத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 116/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நக்கிள்ஸ் வன ஒதுக்கத்தைப் பாதுகாத்தல்,— இலங்கையின் ஒட்டுமொத்த சுற்றாடல் முறைமையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கூருணர்வுமிக்க சுற்றாடல் முறைமையொன்றாகிய நக்கிள்ஸ் வன ஒதுக்கமானது தற்போது மனித செயற்பாடுகளின் காரணமாக கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதோடு, இன்றைய சந்ததியினருக்கும் அதேபோன்று எதிர்கால சந்ததியினருக்கும் மேற்படி சுற்றாடல் அழிவின் காரணமாக ஆபத்தான நிலைமைக்கு முகங்கொடுக்க நேரிடுவதால், மனிதர்களால் ஏற்படுத்தப்படுகின்ற அச்சுறுத்தல்களை அகற்றி நக்கிள்ஸ் வன ஒதுக்கத்தின் சுயாதீனமான இருப்பை துரிதமாக உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 117/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்குகளை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 118/ '15

கௌரவ புத்திக பத்திறண,— புலமை சார்ந்த வறுமையை ஒழித்தல்,— பௌதீக வர்த்தகப் பொருட்கள் புழங்கும் வேகத்திற்கு நிகராக அறிவு, புலமை மற்றும் மானிட ஒழுக்க விழுமியங்கள் மக்களை சென்றடையாமை காரணமாக அறியாமை தலைதூக்கியுள்ளதன் மூலம், புலமைசார்ந்த வறுமை எமது நாட்டில் காணப்படும் பிரதான பிரச்சினையாக இருந்த போதிலும் அது தொடர்பாக நாட்டினுள் குறைந்தளவு கவனமே செலுத்தப்படுவதனால் நாட்டு மக்களின் புலமைசார்ந்த வறுமையை இல்லாமல் செய்வதற்காக, சகல வயதுப் பிரிவினரும், உள்ளடங்குகின்ற வகையில் முறைசார்ந்த விதத்தில் திட்டமிடப்பட்ட தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 119/ '15

கௌரவ புத்திக பத்திறண,— காலாவதியான ஔடதங்கள் பயன்படுத்தப்படுவதைத் தவிர்த்தல்,— தற்போது இலங்கையில் காலாவதியான ஔடதங்கள் சந்தையிலும் அரச வைத்தியசாலைகளிலும் பாவனைக்கு வரும் ஆபத்து காணப்படுவதனால் அரசின் சகல பிரிவினரும் தலையிட்டு செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரித்து காலாவதியான ஔடதங்களை சந்தையிலிருந்து அகற்றுவதற்கும் இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 120/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுத்தல்,— இலங்கையில் தற்போது இனம்காணப்படாத அண்ணளவாக 3000 எயிட்ஸ் நோயாளர்கள் இருப்பதாக அறிக்கைகள் வெளியாகியுள்ளதால், அவர்களை இனம்கண்டு சிகிச்சையளிப்பதற்கும், எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுப்பதற்கும் பயனுறுதியானதும், பொருத்தமானதுமான கருத்திட்டமொன்று துரிதமாக ஆரம்பிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 121/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாடுகளில் பாலியல் துஷ்பிரயோகஙளுக்கு இலக்காகும் பெண்களுக்கு நிவாரணமளித்தல்,— இலங்கைப் பெண்கள் வீட்டுப் பணிப்பெண் சேவைக்கென வெளிநாடு சென்ற பின்னர் நிகழும் பாலியல் துஷ்பிரயோகங்கள் காரணமாக ஏற்படும் கருத்தரிப்புகளால் இலங்கைச் சமூகத்தில் உருவாகியுள்ள பிரச்சினை நிலைமைகளைத் தீர்ப்பதற்கான ஒழுங்கான முறையியலொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு கல்விமான்கள் மற்றும் குறித்த சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 122/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— வன ஒதுக்கங்கள் மற்றும் சரணாலயங்களின் பாதுகாப்பைத் உறுதிப்படுத்துவதற்கான சட்டங்களை இயற்றுதல்,— அண்மைக் காலமாக இலங்கையிலுள்ள வன ஒதுக்கங்கள் மற்றும் சரணாலயங்களின் அழிவு அதிகரித்து வருவதோடு, இலங்கையின் சுற்றாடல் சமநிலைக்கு அதன் மூலம் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதால், இந்த அழிவை நிறுத்துவதற்காக மக்களின் மனப்பாங்குகளில் மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் அதேபோன்று அமுலிலுள்ள சட்ட ஏற்பாடுகளை முறைசார்ந்ததாக மற்றும் கடுமையானதாக இருக்கக்கூடியவாறு திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 123/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— பல்வேறு சமய குழுக்களாலும் ஏற்படுத்தப்படுகின்ற சமூகத் தாக்கங்கள் பற்றி ஆய்வு செய்தல்,— பிரதானமான போக்கிலுள்ள சமயக் கருத்தியல்களை விமர்சித்துக் கொண்டு, அச் சமயங்களின் உப பிரிவுகளாக தமது வியாக்கியானங்கள் மற்றும் விளக்கங்களை சமூகமயப்படுத்துகின்றதும், புதிய கருத்தியல்களை முன்வைத்து, அக் கருத்தியல்களை ஏற்றுக்கொள்கின்ற ஆட்களை அணிதிரட்டுகின்றதுமான, சமய மற்றும் வேறு தோற்றங்களில் சமூகமயமாகி இருக்கின்ற குழுக்கள் தொடர்பாக ஆராய்ந்து அவர்களுடைய கருத்தியல்கள், செயற்பாடுகள் மற்றும் சமூகத்திற்கு அவர்களால் ஏற்படுகின்ற தாக்கங்கள் எவ்வாறானவை என்பதைப் பற்றிய மதிப்பீடொன்றை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சமயத் தலைவர்கள் மற்றும் கல்விமான்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்து, அறிக்கையொன்றைப் பெற்று அதன் விதப்புரைகளை செயற்படுத்துதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.124/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— உயர் தரத்திலான மட்பாண்டங்களை உற்பத்தி செய்தல்,— சமையலின் போது எரிவாயு மற்றும் மின்சாரம் விரயமாகாத வகையில் துரிதமாக வெப்பத்தை உள்ளீர்த்துக்கொள்ளக்கூடிய மட்பாண்டங்களை உற்பத்தி செய்து சந்தைக்கு வழங்குவதற்குத் தேவையான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் மட்பாண்டங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான முறையில் உணவு சமைக்கக்கூடிய இயலுமை தொடர்பாகவும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டுகின்ற தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேணடுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 125/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆன்மீக உளவியல் துறைக்கு பௌத்த தர்மத்திலிருந்து செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளல்,— உள்ளம் பற்றிய புத்தபிரானின் ஒருசில விளக்கங்கள் நவீன விஞ்ஞானத்தாலும் கண்டறிய இயலாத அளவுக்கு ஆழமானதாக உள்ளதால், அது பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் நிகழ்காலத்தில் ஆன்மீக உளவியல் துறையில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு பௌத்த தர்மத்தைத் தழுவியதான வரைவிலக்கணங்களையும் தீர்வுகளையும் முன்வைக்கக்கூடிய வகையில், சம்பந்தப்பட்ட துறை பற்றிய பரந்த அறிவுபடைத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கல்விமான்களைக் கொண்ட குழுவொன்றைத் தாபித்து, அதனூடாக பௌத்த தர்மத்தை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பிரபல்யப்படுத்தவும், இலங்கையின் நற்பெயரை மேம்படுத்தவும், ஆன்மீக உளவியல் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும் அரசாங்கம் இடையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 126/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கற்றறிவாளர் மத்தியில் தொல்பொருளியல் விடயத்தைப் பிரபல்யப்படுத்துதல்,— கற்றறிவாளர் மத்தியில் தொல்பொருளியல் விடயத்தைப் பிரபல்யப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கையாக பாடசாலைப் பாடத்திட்டத்தில் மேற்படி பாடத்தைச் சேர்த்துக் கொள்வதையும் பல்கலைக்கழகங்களில் தொல்பொருளியல் விடயப்பரப்பை தொடர்ந்தும் விஸ்தரிப்பதற்கான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதையும், அதன் மூலம் தொல்பொருளியல் விடயத்துறையை நாடெங்கினும் பரப்புவதன் மூலம் உருவாகின்ற கல்விமான்களிடமிருந்து சாதகமான சேவையை பெற்றுக்கொள்வதையும் நோக்கமாகக் கொண்ட தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை நீண்டகால ரீதியில் திட்டமிட்டு உருவாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்மென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 127/ '15

கௌரவ புத்திக பத்திறண, — உணவு வகைகளில் உள்ளடங்கியுள்ள நச்சுத்தன்மையைப் பற்றி ஆராய்வதற்காக விஷேட தரநிர்ணய நிறுவனமொன்றை தாபித்தல்,— கமத்தொழிலின்போது பயன்படுத்தப்படும் இரசாயன பதார்த்தங்களின் காரணமாக உணவுப் பொருட்களிலும் நச்சுத்தன்மை கலந்துள்ளதுடன், இது பற்றி கண்டறிவதற்கு ஏற்புடைய தரநிர்ணய நிறுவனமொன்று ஏற்கனவே இலங்கையினுள் நிறுவப்படாமையினால் இவ்விடயத்திற்கென விஷேட தர நிர்ணய நிறுவனமொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 128/ '15

கௌரவ புத்திக பத்திறண,— யாசகர்கள் யாசிப்பதற்குப் பயன்படுத்துகின்ற சிறுவர்களுக்குப் புனர்வாழ்வளித்தல்,— இலங்கையில் யாசகர்கள் சிறுவர்களுடன் யாசிப்பதைத் தடை செய்து, யாசிப்பதற்காகப் பயன்படுத்துகின்ற சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்து, அவர்களை சிறந்த பிரசைகளாக சமூகமயப்படுத்தத் தேவையான தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.